# பூமியின் தூளிலிருந்து வானத்தின் நட்சத்திரத்துக்கு

**(From The Dust of the Earth To The Star of the Heaven)**

நவம்பர் 2, 2014, கல்வாரி சபை, சென்னை

**(Nov 2, 2014, Calvary Tabernacle, Chennai)**


போதகர் **A.** சாமுவேல்

**(Pastor A. Samuel)**

எங்களை நேசிக்கிற நல்ல ஆண்டவரே உம்மைத் துதிக்கிறோம். இந்த அருமையான காலை வேளையிலே உம்முடைய ஆலயத்திலே நாங்கள் ஒன்று சேர்ந்து உமக்கு ஆராதனை செய்யும்படியான கிருபையைத் தந்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். இஸ்ரவேலின் துதிகளின் மத்தியில் வாசமாயிருகிகிற தேவன் எங்களுடைய துதியிலே நீர் அசைவாடுவதற்காக உமக்கு ஸ்தோத்திரம். எங்கள் மத்தியில் நீர் பலமுள்ள தூதனாய் இருப்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம். நீர் வார்த்தையின் ரூபமாய் (**Word Form)** இருப்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம். எங்களுடைய மாம்ச கண்களினால் உம்மைக் காணமுடியாவிட்டாலும் எங்களுடைய ஆவியிலே உம்முடைய பிரசன்னத்தை உணர்கிறோம். கர்த்தாவே நாங்கள் உம்மைத் தொழுதுகொள்ளுகிறோம். உம்முடைய நாமத்தை நாங்கள் தொழுதுகொள்ளுகிறோம். நீர் மகா பெரியவர். நீர் பரிசுத்தர். கர்த்தாவே நீர் நல்லவராயிருக்கிறீர். நீர் எங்களிடத்தில் மிகவும் அன்புகூர்ந்தபடியால் எங்களுக்காக உம்முடைய இரத்தத்தைச் சிந்தினீர், உம்முடைய ஜீவனைக் கொடுத்தீர். அந்த ஜீவனை எங்களுக்குள் இடம்பெறச் செய்திருக்கிறீர். பரிசுத்தஆவியினால் நாங்கள் நடத்தப்படுவதற்காக உமக்கு ஸ்தோத்திரம்.

இந்த கடைசி காலத்திலே சகல ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து நீர் ஒரு ஜனத்தை உமக்காகத் தெரிந்துகொண்டு அவர்களை உம்முடைய மணவாட்டியாக நீர் மாற்றியிருப்பதற்காக ஸ்தோத்திரம். அவர்கள் உம்மைப் பின்சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உம்முடைய வார்த்தையை வெளிப்படுத்துகிறீர், இரகசியத்தை நீர் வெளிப்படுத்துகிறீர். ஆபிரகாமுக்கு எவ்விதமாக இரகசியத்தை வெளிப்படுத்தினீரோ அதைப்போலவே ஆபிரகாமின் சந்ததியாகிய எங்களுக்கு வெளிப்படுத்துவதற்காக உமக்கு ஸ்தோத்திரம்.

ஒரு காலத்திலே எங்களுடைய முன்னோர்கள் விக்கிரகாரதனைக்காரராய் இருந்தார்கள். தேவனை அறியாதவர்களாய் இருந்தார்கள். ஆனால் உம்முடைய வார்த்தையானது வந்தபொழுது கர்த்தாவே நாங்கள் உம்முடைய பிள்ளைகளாய் மாறியிருக்கிறோம். நாங்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படும்படியான சிலாக்கியத்தை கொடுத்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் உம்முடைய பிள்ளைகளாயிருக்கிறோம். நீர் எங்கள் பிதாவாய் இருக்கிறீர். நாங்கள் உம்முடைய ஜனங்களாய் இருக்கிறோம்; நீர் எங்களுடைய தேவனாய் இருப்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம். உம்முடைய நாமம் எங்களுக்கு தரிப்பிக்கப்பட்டிருப்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம்.

இம்மட்டும் நீர் எங்களுக்குப் பாராட்டின கிருபைகளுக்காக உமக்கு ஸ்தோத்திரம். இந்த கடைசி கால சந்ததிக்கு முத்திரைகளைத் திறந்து தேவரகசியத்தை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறீர். எங்களுக்கு முன்னால் வாழ்ந்த பரிசுத்தவான்கள் கூட இவ்விதமான வெளிப்பாட்டைப் பெறவில்லை. இந்த கடைசி காலத்தில் எங்களுக்காக இந்த வெளிப்பாட்டை, இந்த பிந்தின திராட்சரசத்தை வைத்திருப்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். நாங்கள் அந்த திராட்சரசத்தை பானம்பண்ணி ஊக்குவிக்கப்பட **(Stimulation)**, ஆவியிலே மகிழ்ந்து களிகூர, அந்த வெளிச்சத்திலே நடக்க நீர் எங்கள் அனைவருக்கும் கிருபைத் தருவீராக.

நீர் பரிசுத்தர், மகா பரிசுத்தர். ஆண்டவரே நீர் பரிசுத்தர் பரிசுத்தரென்று ஆயிரமாயிரமான தேவதூதர்களும் கேருபீன்களும் சேராபீன்களும் உம்மைப் போற்றிக்கொண்டிருக்கிறார்கள். இந்த காலை வேளையிலே உமக்கு ஆராதனை செய்ய, உம்மைப் புகழ, உமக்கு ஸ்தோத்திரங்களை ஏறெடுக்க எங்களை நீர் வைத்திருப்பதற்காக உமக்கு ஸ்தோத்திரம். இரத்தத்தினால் நீர் எங்களைப் பரிசுத்தப்படுத்தியிருக்கிறீர். கர்த்தாவே எங்களை மீட்டுக்கொண்டிருக்கிறீர். எங்களுக்கு ஆத்தும மீட்பைத் **(Soul Redemption)** தந்திருக்கிறீர், விரைவிலே எங்களுக்கு சரீர மீட்பையும் **(Body Redemption)** தருவீர் என்று எதிர்நோக்கியிருக்கிறோம். அப்பொழுது நாங்கள் உம்மை முகமுகமாக காண்போமென்ற நம்பிக்கையோடிருக்கிறோம். இப்பொழுது நாங்கள் சாத்தானின் எதேனில் ஜீவித்துக்கொண்டிருக்கிறோம். தேவனுடைய எதேனாகிய அந்த ஆயிரவருட ஆளுகைக்காக நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம். கர்த்தாவே நீர் இந்த உலகத்திலே எங்களைப் பாதுகாத்துவருகிறதற்காக ஸ்தோத்திரம். எத்தனையோ ஆபத்துக்கள், எத்தனையோ வியாதிகள், எத்தனையோ போராட்டங்கள், எவ்வளவு பாவங்கள் எங்களைச் சூழ்ந்திருக்கும்போது அதின் மத்தியில் நீர் எங்களைப் பாதுகாத்துவந்ததற்காக ஸ்தோத்திரம். எங்கள் குடும்பத்தை நீர் பாதுகாத்துவந்ததற்காக ஸ்தோத்திரம். இந்த சபையை நீர் பாதுகாத்து போஷித்து வந்த தயவுக்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம்.

நாங்கள் ஒரு மனதோடு ஒரே இருதயத்தோடு அந்த மேலறையில் நூற்றிருபது பேர் இருந்ததுபோல நாங்களும் இருக்க எங்களுக்கு கிருபை தாரும். எங்கள் மத்தியில் நீர் அசைவாடுவீராக. ஆண்டவரே உம்முடைய ஆசீர்வாதத்தை நீர் எங்களுக்குத் தரவேண்டுமென்று ஜெபிக்கிறோம். எங்களோடு நீர் பேசவேண்டுமென்று ஜெபிக்கிறோம். உம்முடைய சத்தத்தை நாங்கள் கேட்கவேண்டுமென்று

ஜெபிக்கிறோம். இயேசுவே உமக்கு ஸ்தோத்திரம். எங்களைப் பேர்சொல்லி அழைப்பீராக. எங்களுக்கு உம்முடைய இரகசியத்தை வெளிப்படுத்துவீராக. நடக்கப்போகிற காரியங்களை எங்களுக்கு வெளிப்படுத்துவீராக. இங்கே கர்த்தருக்கு தங்களை ஒப்புக்கொடுத்த அனைவரையும் ஆசீர்வதிப்பீராக. எங்களை ஜீவபலியாக பலிபீடத்திலே ஒப்புக்கொடுக்கிறோம். உம்முடைய பரிசுத்தாஆவி என்னும் அக்கினியாலே நீர் எங்களை அங்கிகரிக்கவேண்டுமென்று ஜெபிக்கிறோம். எங்களை அபிஷேகம் **(Anoint)** பண்ணுவீராக. எங்கள் ஆத்துமாவை உயிர்ப்பிப்பீராக. நாங்கள் அறியப்பட்டிருக்கிறபடியே நாங்கள் அறிந்துகொள்ள, கிறிஸ்துவின் சிந்தையை நாங்கள் உடையவர்களாய் இருக்கத்தக்கதாக இயேசுவே நீர் எங்களுக்கு கிருபை தருவீராக. அடியேனை மறைத்து நீர் பேசுவீராக. உம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தினால் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

## ஆதியாகமம் 13:14 - 17

14. லோத்து ஆபிராமைவிட்டுப் பிரிந்தபின்பு, கர்த்தர் ஆபிராமை நோக்கி: உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார்.

15. நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து,

16. உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும்.

17. நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்துதிரி; உனக்கு அதைத் தருவேன் என்றார்.

## ஆதியாகமம் 15:1 - 6

1. இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்குத் தரிசனத்திலே உண்டாகி, அவர்: ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார்.

2. அதற்கு ஆபிராம்: கர்த்தராகிய ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே; தமஸ்கு ஊரானாகிய இந்த எலியேசர் என் வீட்டு விசாரணைக்கர்த்தனாய் இருக்கிறானே என்றான்.

3. பின்னும் ஆபிராம்: தேவரீர் எனக்குப் புத்திரசந்தானம் அருளவில்லை; இதோ என் வீட்டிலே பிறந்த பிள்ளை எனக்குச் சுதந்தரவாளியாய் இருக்கிறான் என்றான்.

4. அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி: இவன் உனக்குச் சுதந்தரவாளியல்ல, உன் கர்ப்பப்பிறப்பாயிருப்பவனே உனக்குச் சுதந்தரவாளியாவான் என்று சொல்லி,

5. அவர் அவனை வெளியே அழைத்து: நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்.

6. அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்.

**ஆதியாகமம் 13:16 & 15:5**

16. உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும்.

5. அவர் அவனை வெளியே அழைத்து: நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்.

அருமையானவர்களே, ஆதியாகமம் **13: 16** வசனத்திலே கர்த்தர் ஆபிரகாமின் சந்ததியை பூமியின் தூளைப்போல பெருகப்பண்ணுவேன் என்று சொன்னார். வேறொரு இடத்தில் கடற்கரை மணலைப்போல பெருகப்பண்ணுவேன் என்று சொல்லியிருக்கிறது. "கடற்கரை மணலை (**grains of sand**) நீ எண்ண முடியுமா? எண்ணக்கூடுமானால் உன் சந்ததியையும் எண்ணலாம். உன் சந்ததி அவ்வளவு பெரிதாயிருக்கும்" என்று கர்த்தர் ஆபிரகாமோடு சொல்லுகிறார்.

அதன்பின்பு **15**ம் அதிகாரத்திலே அவர் வேறொரு சொல்லைச் (**Term**) சொல்லுகிறார். என்ன சொல்கிறாரென்றால், ஆபிரகாமை கூடாரத்திற்கு வெளியே அழைத்து, "நீ வானத்தை அண்ணாந்துபார் அங்கே எவ்வளவு நட்சத்திரங்கள் இருக்கிறது, இந்த நட்சத்திரங்களை உன்னால் எண்ணக்கூடுமானால் எண்ணு". அங்கே எண்ணமுடியாத நட்சத்திரங்கள் இருக்கிறது. நட்சத்திரங்களை நம்மால் எண்ணமுடியாது. அதைப்போலவே உன் சந்ததி அவ்வண்ணமாயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆதியாகமம் **13: 16** மற்றும் **15:5** ல் என்ன சொல்லியிருக்கிறதென்றால், கர்த்தர் நம்மைப் பூமியின் தூளிலிருந்து வானத்தின் நட்சத்திரங்களுக்கு உயர்த்துகிறார் **(From the dust of the earth to the stars of heaven).** அல்லேலூயா. அதுதான் ஆபிரகாமின் சந்ததிக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம். அல்லேலூயா. நீங்கள் உண்மையாகவே ஆபிரகாமின் சந்ததியாயிருந்தால் வரவர கீழே போகமாட்டீர்கள். வருமானம் இல்லை, ஒன்றுமே செய்யமுடியவில்லை என்று நீங்கள் சொல்லலாம். அது மனுஷீக தன்மையின்படி நீங்கள் சொல்லலாம். ஆனால் வெளிப்பாட்டின்படி நீங்கள் பார்த்தால் கர்த்தர் உங்களை மேன்மேலும் ஆசீர்வதிப்பார். அல்லேலூயா. பூமியின் தூளிலிருந்து வானத்தின் நட்சத்திரங்களுக்கு உயர்த்துவார். அவ்வளவு தூரம் உயர்த்துவார் என்று சொல்லியிருக்கிறது. நீங்கள் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காணமுடியும். நாம் உண்மையாகவே ஆபிரகாமின்

சந்ததியாயிருந்தால் இந்த வாக்குத்தத்தம் **(Promise Word)** நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அல்லேலூயா. ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் ஆண்டவர் கொடுத்தார். பூமியின் தூளிலிருந்து வானத்தின் நட்சத்திரங்களுக்கு! அவ்வளவு உயரமாய் நான் உங்களை உயர்த்தமுடியும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அல்லேலூயா. பூமியின் தூள் (**dust of the earth)** ஒன்றுக்கும் உதவாது ஆனால் நட்சத்திரம் (**star**) பிரகாசிக்கிறது. உங்களை மகிமையடையச்செய்வேன் (**Glorification**) என்று கர்த்தர் சொல்லுகிறார். அல்லேலூயா. எவ்வளவு அருமையான வாக்குத்தத்தம்!

ஆதியாகமம் **13**ம் அதிகாரத்திலே நாம் வாசிக்கும்போது, லோத்து ஆபிரகாமை விட்டு பிரிந்துவிட்டான் (**Lot separated from Abraham).** அந்த நேரத்தில்தான் கர்த்தர் ஆபிரகாமைப் பார்த்து "நீ உன் கண்களை ஏறெடுத்துப்பார் (**Lift up your eyes and see).** இந்த தேசம் முழுவதையும் நீ பார். வடக்கேயும் கிழக்கேயும் தெற்கேயும் மேற்கேயும் பார். நீ எவ்வளவு இடத்தை உன் கண்ணால் காண்கிறாயோ அவ்வளவு இடமும் உனக்கும் உன் சந்ததிக்கும் கொடுக்கப்படும். நீ எவ்வளவு தூரம் பார்க்கிறாயோ எவ்வளவு தூரம் நடக்கிறாயோ அதெல்லாம் உனக்கே" என்று சொல்லுகிறார். அல்லேலூயா.

இன்றைக்கு மனிதர்கள் தங்களுக்கு ஒரு சிறிய (**cent**) நிலம் இருந்தாலே தங்களைப் பெரிய பணக்காரர்களாய் நினைக்கிறார்கள். ஆனால் ஆபிரகாமுக்கு ஆண்டவர் என்ன சொன்னாரென்றால் "நீ பார்க்கும் எல்லா இடமும் உனக்குச் சொந்தம்". அல்லேலூயா. **(All the land that he saw the Lord gave it to him and his seed).** அவன் சந்ததிக்கும் ஆண்டவர் கொடுத்தார். ஆமென்.

ஆதியாகமம் **15**ம் அதிகாரத்திலே நாம் பார்க்கும்போது, கர்த்தர் ஆபிரகாமோடு பேசிக்கொண்டிருக்கிறார். அப்பொழுது அவன் என்ன சொல்கிறானென்றால், எனக்கு நீர் புத்திரசந்தானத்தைத் தரவில்லையே, நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே, எனக்கு நீர் என்ன தருவீர்? என் வீட்டிலே இருக்கும் எலியேசர் என் வீட்டிலே பிறந்து வளர்ந்து எனக்கு உத்தமமான வேலைக்காரனாய் இருக்கிறான், அவனை நான் எனக்கு புத்திரனாய் எடுத்துக்கொள்ளலாமா? அவன் மூலமாக அந்த சந்ததி வருமா? என்று சொல்லும்போது கர்த்தர் என்ன சொல்கிறாறென்றால், "அது அவன் மூலமாக வராது, உன் அரையிலிருந்து தான் அந்த ஜீவன் வரவேண்டும் **(It will come from your loins)**, உன்னுடைய கர்ப்பப்பிறப்பாயிருக்கிற அவன் மூலமாகத்தான் அந்த சந்ததி வரும்" என்று சொல்லி அவனை கூடாரத்திற்கு வெளியே கொண்டுவந்து,

“வானத்தை அண்ணாந்துபார், அந்த நட்சத்திரங்களைப்பார், எப்படி ஜொலித்துக் கொண்டிருக்கிறது, எவ்வளவு அதிகமாய் இருக்கிறது, எண்ணமுடியாததாய் இருக்கிறது, அதைப்போலவே உன் சந்ததியைப் பெருகப்பண்ணுவேன்” என்று சொன்னார். அல்லேலூயா. நம்மைப் பிரியப்படுத்துவதற்காக தேவனுடைய வார்த்தை எழுதப்படவில்லை. தேவனுடைய வார்த்தை உண்மையானது **(God’s Word is real)**. அல்லேலூயா. விசுவாசித்தால் கர்த்தரால் எல்லாம் செய்யமுடியும். நீங்கள் உங்கள் தற்போதைய சூழ்நிலையைப் **(Present Condition)** பார்க்காதபடி தேவனுடைய வார்த்தையைப் பார்த்தால் அந்த வார்த்தை நம்முடைய வாழ்க்கையில் நிறைவேறும். அல்லேலூயா. தேவனிடத்தில் பட்சபாதமில்லை.

ஆதியாகமம் **15:5** ல் நாம் என்ன வாசிக்கிறோமென்றால், அவன் சந்ததி வானத்து நட்சத்திரங்களைப்போல் இருக்கும் என்று தேவன் சொல்லுகிறார். **(God told him that his seed would be like the stars of the heaven).** ஆதியாகமம் **13:16** ல் என்ன வாசிக்கிறோமென்றால் அவன் சந்ததி பூமியின் தூளைப்போல் இருக்கும். **(His seed would be as the dust of the earth).** அல்லேலூயா. நாம் எத்தனைப் பேர் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம்? ஆமென். பூமியின் தூள்...நம்முடைய சரீரம் தான் அந்தத் தூள் **(dust).** ஆண்டவர் மனுஷனை மண்ணினால் உண்டாக்கினார். இந்த சரீரத்தை பூமிக்குரிய மேனி **(Terrestrial Body)** என்று சொல்லப்பட்டிருக்கிறது. நட்சத்திரத்தை வானத்துக்குரிய மேனி **(Heavenly Body or Celestial Body)** என்று சொல்லப்பட்டிருக்கிறது. பூமிக்குரிய மேனியிலிருந்து வானத்துக்குரிய மேனி. **(From Terrestrial to Celestial).** இதெல்லாம் வேதப்பூர்வமான சொற்கள். **(These are Biblical terms).** மண்ணினால் உண்டாக்கப்பட்ட நம்முடைய சரீரத்தை ஆண்டவர் வானத்திற்குரிய சரீரமாய் **(Heavenly Body)** மாற்றுகிறார். அல்லேலூயா. அது தான் தூளிலிருந்து நட்சத்திரத்துக்கு.. **(From the Dust to the Stars).** உலகப்பிரகாரமான ஆசீர்வாதத்தை நான் இங்கே சொல்லவில்லை. அதைவிட மேலான ஆசீர்வாதம். நம்மையும் நம்முடைய சந்ததியையும் பூமிக்குரிய சரீரத்திலிருந்து வானத்திற்குரிய சரீரமாய் மாற்றுவேன் **(From earthly body to heavenly or glorified body)** என்று கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். எத்தனைப்பேர் இந்த வாக்குத்தத்தத்தைப் விசுவாசிக்கிறோம்? இதைவிட மேலான வாக்குத்தத்தம் எதுவுமே இல்லை. அவன் சந்ததி நட்சத்திரங்களைப்போல இருக்கும். இது ஒரு இரகசியம். **(His seed would be like the stars. This is a mystery).** எப்படித் தூளிலிருந்து நட்சத்திரமாக மாறமுடியும்? **(How to become a star from the dust?).** அந்த இரகசியம் என்ன? இதோ கர்த்தர் நமக்கு வேதத்தில் எழுதிவைத்திருக்கிறார். அல்லேலூயா. இந்த கடைசிகால

சந்ததியை, ஆபிரகாமின் சந்ததியை ஆண்டவர் தூளிலிருந்து நட்சத்திரமாக மாற்றுவேனென்று சொல்லியிருக்கிறார். அல்லேலூயா. இது ஒரு பெரிய இரகசியமாயிருக்கிறது. **(It's a great mystery).** இந்த இரகசியத்தை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். நாம் தூளிலிருந்து நட்சத்திரமாகப்போகிறோம். எத்தனைப்பேர் விசுவாசிக்கிறோம்? இந்த பூமிக்குரிய சரீரத்தை, மண்ணினால் உண்டாக்கப்பட்ட இந்த மாம்ச சரீரத்தை ஆண்டவர் மகிமையடையச் செய்வார் **(Glorification).** மகிமையின் சரீரமாக **(Glorified Body)** மாற்றப்போகிறார். அது தான் அந்த இரகசியம்.

ஆதியாகமம் **13**ம் அதிகாரத்திலே ஆண்டவர் தூள் என்று சொல்லிவிட்டு ஆதியாகமம் **15**ம் அதிகாரத்திலே நட்சத்திரங்கள் என்று சொல்லியிருக்கிறார். தூளிலிருந்து நட்சத்திரமாக வேண்டுமென்றால் இடையில் என்ன இருக்கிறது? ஆதியாகமம் **14**ம் அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தை அவன் சந்திக்கும்போது, அதைத்தாண்டிப் போகும்போது அவன் சந்ததி நட்சத்திரமாக மாறிவிட்டது. அதைப்போல நீங்கள் **14**ம் அதிகாரத்தை தாண்டிப் போவீர்களென்றால், அந்த அதிகாரத்தின் இரகசியம் **(mystery)** உங்களுக்குக் கொடுக்கப்படுமென்றால், நீங்கள் அதில் ஒரு பாகமாய் மாறுவீர்களென்றால், அந்த அனுபவம் **(experience)** உங்களுக்கு இருக்குமென்றால் நீங்கள் கண்டிப்பாக நட்சத்திரமாக மாறுவீர்கள்.

உலகத்திலே எத்தனையோ நட்சத்திரங்கள் **(stars)** இருக்கிறது. விளையாட்டு நட்சத்திரம் **(Sports star),** சினிமா நட்சத்திரம் **(Cinema star),** அரசியல் நட்சத்திரம் **(Political star)** என்று எத்தனையோ நட்சத்திரங்கள் இருக்கிறது. அந்த நட்சத்திரங்கள் எல்லாமே ஒருநாளில் அழிந்துபோகும். அதெல்லாம் மங்கிப்போகும். ஆனால் ஆண்டவர் நம்மை நட்சத்திரமாக மாற்றும்போது நாம் ஒருக்காலும் அழிந்துபோகமாட்டோம். நித்திய காலமாக இருப்போம். அல்லேலூயா. இந்த மகிமை ஒருநாளும் மங்கிப்போகாது. **(This glory will not fade away).** அவ்விதமான மகிமையை நமக்குத் தருவேனென்று கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். அல்லேலூயா. நாம் எவ்வளவு விசேஷித்தவர்களாயிருக்கிறோம்! இந்த சிலாக்கியம் என்ன? தேவனுடைய வார்த்தையை நாம் கவனமாகக் கேட்கும்போது அந்த இரகசியத்தை நாம் புரிந்துகொள்ள முடியும்.

சகோ. பிரன்ஹாம் **(Bro. Branham)** "ஆபிரகாமுடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்துதல்" **(61-0210 Abraham's Covenant Confirmed, Long Beach, Friday)** என்ற செய்தியில் என்ன சொல்லுகிறாரென்றால் ஆதியாகமம் **13:16**ல், தேவன் ஆபிரகாமோடு உடன்படிக்கையைப் பற்றி பேசும்போது, "உன் சந்ததியைப் பூமியின்

தூளைப்போலப், கடற்கரை மணலைப் போலப் பெருகப்பண்ணுவேன்" என்று சொன்னார். ஆதியாகமம் **15:5**ல், அவனோடு உடன்படிக்கையை உறுதிப்படுத்தும்போது மறுபடியும் அதைப்பற்றிப் பேசும்போது, அவனை வெளியே அழைத்து, "நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால் அவைகளை எண்ணு" என்று சொல்லி, "உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும்" என்றார். தூளிலிருந்து நட்சத்திரங்களுக்கு, பூமியிலிருந்து மகிமைக்கு! அல்லேலூயா. **(Now we find out in Genesis 13:16, God told Abraham when He spoke to him about His covenant, He said, "I will multiply you, and your seed shall be like the dust of the sands by the side of the sea", like little grains of dust in the earth. "Your seed shall be like that" Genesis 15:5 when He confirmed the covenant, or spoke to him again about it, He said, "And go outside and look up; can you number the stars? How that there's so many stars, innumerable..Look, from dust to stars..From the earth, grave to glory)..**

கிறிஸ்துவே ஈசாக்கு மூலமாக வந்த ஆபிரகாமின் உண்மையான வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட வித்து. **(Real promised seed of Abraham came through Isaac was Christ).** ஆமென். அந்த சந்ததி கிறிஸ்துவே. இயேசு கிறிஸ்து ஆயிரம் பதினாயிரம் பேர்களில் சிறந்தவராயிருக்கிறார். சாரோனின் ரோஜாவும் பள்ளத்தாக்கின் லீலி புஷ்பமுமாயிருக்கிறார். ஆமென். சகோ. பிரன்ஹாம் என்ன சொல்லுகிறார் என்று கவனியுங்கள். கிறிஸ்துவோடுகூட நாம் மரித்தோமானால் இதோ ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம். **(We find out that being dead in Christ, we are Abraham's seed)** நாம் நம்மை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து, கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டோமென்றால் நாம் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம் என்று சகோ. பிரன்ஹாம் சொல்லுகிறார். அதன்பின்பு என்ன சொல்லுகிறாரென்றால், நாம் ஆபிரகாமின் வித்தாய் இருப்போமென்றால் ஆபிரகாமுடைய விசுவாசம் நமக்கு இருக்கும். **(If you are Abraham's seed, we have to have the faith of Abraham)** ஆமென். அப்படி இல்லையென்றால் நாம் ஆபிரகாமின் சந்ததி அல்ல. அதன்பின்பு என்ன சொல்லுகிறாரென்றால், நாம் பரிசுத்தஆவியைப் பெறும்போது நாம் புறஜாதிகளல்ல நாம் யூதர்கள். **(We receive the Holy Spirit, then we are no longer Gentiles but we are Jews)** என்ன யூதர்கள்? வெளிப்படையான யூதர்களல்ல, உள்ளத்திலே யூதர்களாயிருக்கிறோம். ஆமென். அப்பொழுது நமக்கு வாக்குத்தத்தங்களெல்லாம் சொந்தமாகிறது. அதன்பின்பு சொல்லுகிறார், "நீங்கள் ஆபிரகாமின் சந்ததியாய் மாறின பின்பு நீங்கள் ஆபிரகாமுக்குச் சொன்ன எல்லா வாக்குத்தத்தங்களையும் எடுத்துக்கொள்ள முடியும். அது எவ்விதமாக

தோன்றினாலும் அது உங்களுக்குச் சொந்தம். அல்லேலூயா. **(Then we take every promise of God made, no matter how ridiculous it looks like)** நீங்கள் தூளிலிருந்து நட்சத்திரங்களுக்கு உயரமுடியும். எத்தனைப் பேர் விசுவாசிக்கிறோம்? **(From the dust to the stars. From the dust of the air to the shining stars in glory)** பூமியின் தூளிலிருந்து மகிமையாய் பிரகாசிக்கிற நட்சத்திரங்களாய் மாறுவோம். ஆதாம் விழுந்துபோனபோது நாம் இனச்சேர்க்கையின் மூலமாக வந்திருக்கிறோம். நாம் மாம்சத்தின்படி பிறந்திருக்கிறோம். மெல்கிசேதேக்கு ஆபிரகாமுக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்தார். **(Melchizedek gave Abraham bread and wine)** இன்னொரு விதத்தில் சொன்னால், ஆபிரகாம் மனுஷகுமாரனுடைய சரீரத்திலும் இரத்தத்திலும் பங்குபெற்றான். **(Abraham partake of the flesh and blood of the Son of Man)** வார்த்தையிலும் ஆவியிலும் அவன் பங்குபெற்றான். **(The Word and the Spirit)** அல்லேலூயா. மனுஷகுமாரனின் மாம்சத்தைப் புசியாமலும் அவர் இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் ஜீவனில்லை. அல்லேலூயா. மனுஷகுமாரனின் மாம்சமும் இரத்தமும் என்னவென்றால் அவருடைய வார்த்தையும் ஆவியும். **(The flesh and the blood of the Son of Man is His Word and His Spirit)** கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கல்வாரியிலே நமக்கு அதைச் சம்பாதித்தார். கல்வாரியிலே செய்துமுடித்த அந்த கிரியையின்படி **(The work on the cross)** அவருடைய சரீரமானது நொறுக்கப்பட்டது, அவருடைய இரத்தம் நமக்காக சிந்தப்பட்டது. **(On Calvary, His body was broken and His blood was shed for us)** அல்லேலூயா. அது நமக்கு புதுப்பிறப்பைக் கொண்டுவருகிறது. **(That brings us the New Birth)** ஆமென். புதுப்பிறப்பு நமக்கு என்ன செய்கிறது? நம்மை ஆவிக்குரிய சரீரத்திற்கு உயர்த்துகிறது. **(And what does the New Birth do? Raise us up to the Theophany)** அல்லேலூயா. மெல்கிசேதேக்கு எப்படி ஆபிரகாமுக்கு வந்தாரோ அதே விதமாகவே நாம் நம்முடைய ஆவிக்குரிய சரீரத்திற்குக் கொண்டுசெல்லப்படுகிறோம். **(Like Melchizedek coming after the same order)** அல்லேலூயா. சகோ. பிரன்ஹாம் எவ்வளவு அருமையாக விளக்கம் சொல்லியிருக்கிறார். இதை நான் உங்களுக்கு விளக்கிச் சொல்ல விரும்புகிறேன்.

நாம் எப்படி தூளிலிருந்து நட்சத்திரமாக மாற முடியும்? இப்பொழுது இந்த உலகத்தில் நாம் தூளாய் **(dust)** இருக்கிறோம், இந்த சரீரம் ஒரு தூள். ஒரு நாளில் நட்சத்திரமாக **(star)** மாறப்போகிறோம். எத்தனைப்பேர் அந்த அனுபவத்தைப் பெறப்போகிறோம்? ஆமென். அந்த வாக்குத்தத்தத்திற்குத் தான் நாம் காத்துக்கொண்டிருக்கிறோம். அதை எப்படி நாம் பெறமுடியம்? ஆதியாகமம் **14**ம்

அதிகாரத்தில் ஆபிரகாமுக்கு அந்த மெல்கிசேதேக்கின் சந்திப்பு **(The great visitation of Melchizedek)** வந்தபொழுது அவனுக்கு அந்த வாக்குத்தத்தம் கொடுக்கப்படுகிறது. அவன் சந்ததி நட்சத்திரமாக மாறுமென்று! அந்த சந்திப்பு **14**ம் அதிகாரத்தில் வரவில்லையென்றால் அவன் **15**ம் அதிகாரத்திற்கு போகமுடியாது. நட்சத்திரமாக மாறமுடியாது. அதேபோல நம்முடைய வாழ்க்கையில் அந்த சந்திப்பு **(Melchizedek Visitation)** வருமென்றால் அந்த அனுபவத்தை நாம் பெறுவோமென்றால் நிச்சயமாக நாம் நட்சத்திரமாக மாறமுடியும். அல்லேலூயா. வானத்தில் பிரகாசிக்கிற நட்சத்திரங்களாக மாறுவோம். அல்லேலூயா. ஆமென். இயேசுகிறிஸ்து பிரகாசமான விடிவெள்ளி நட்சத்திரமாக இருக்கிறார். ஆண்டவர் நம்மை வானத்து நட்சத்திரங்களாக மாற்றுவார். ஆமென்.

**14**ம் அதிகாரத்தில் என்ன நடந்தது? அங்கே ஒரு யுத்தம் நடந்தது. வேதத்திலே முதலாவது சொல்லப்பட்ட யுத்தம் அதுதான். **(The first recorded war in the Bible).** சோதோமின் ராஜாவை சேர்ந்த ஐந்து ராஜாக்களும் கெதர்லாகோமேரைச் சேர்ந்த நாலு ராஜாக்களும் யுத்தம்பண்ணினார்கள். முதலாம் உலக யுத்தத்திலே இங்கிலாந்துடன் **(England)** ஒரு கூட்டணி இருந்தது, ஜெர்மனியுடன் **(Germany)** ஒரு கூட்டணி இருந்தது. இங்கிலாந்து ஜெயித்துவிட்டது. இந்தியா இங்கிலாந்தின் கூட்டணியில் இருந்தது. ஹிட்லர் **(Hitler)** தோல்வி அடைந்தார். ஒரு யுத்தம் வந்தால் சில நாடுகள் இணையும். அதுபோலத்தான் அங்கு நடந்திருக்கிறது. ஐந்து ராஜாக்கள் நாலு ராஜாக்களோடு யுத்தம் செய்தபோது ஐந்து ராஜாக்கள் தோல்வி அடைந்தார்கள். சோதோமின் ராஜாவும் அவனைச் சேர்ந்த ராஜாக்களும் தோல்வி அடைந்தார்கள். அவர்கள் நிலக்கீலில் போய் விழவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. மீதியாயிருக்கிறவர்கள் மலைக்கு ஏறி தப்பினார்கள். கெதர்லாகோமேரும் அவனைச் சேர்ந்த ராஜாக்களும் இவர்களை முறியடித்து எல்லா உடைமைகளையும் கொள்ளையாடி, அநேகரைச் சிறைக்கைதிகளாகக் **(Prisoners of War)** கொண்டுபோனார்கள். லோத்துவையும் அவன் குடும்பத்தாரையும் அவனுடைய உடைமைகளையும் கொள்ளைக்கொண்டு போனார்கள்.

**ஆதியாகமம் 14:12**

ஆபிராமின் சகோதரனுடைய குமாரனாகிய லோத்து சோதோமிலே குடியிருந்தபடியால், அவனையும், அவன் பொருள்களையும் கொண்டுபோய்விட்டார்கள்.

லோத்து என்பவன் யார்? ஆபிரகாமின் இனத்தான். **(Lot was Abraham's Kinsman)**. அல்லேலூயா. லோத்துவையும் அவன் பிள்ளைகளையும் அவன் உடைமைகளையும் கொள்ளையாடிக்கொண்டுப்போனார்கள் என்ற செய்தி ஆபிரகாமை வந்தெட்டுகிறது.

**ஆதியாகமம் 14:13**

தப்பியோடின ஒருவன் எபிரெயனாகிய ஆபிராமிடத்தில் வந்து அதை அறிவித்தான்; ஆபிராம் தன்னோடே உடன்படிக்கை செய்திருந்த மனிதராகிய எஸ்கோலுக்கும் ஆநேருக்கும் சகோதரனாகிய மம்ரே என்னும் எமோரியனுடைய சமபூமியிலே அப்பொழுது குடியிருந்தான்.

லோத்து சிறையாகக் கொண்டுபோகப்பட்டதை மம்ரேயிலிருக்கும் ஆபிரகாமிற்கு தப்பியோடின ஒருவன் வந்து அறிவித்தான். இந்த செய்தியை ஆபிரகாம் கேள்விப்பட்டபோது அவன் என்ன செய்தானென்றால், அவன் வீட்டிலே பிறந்து வளர்ந்த முந்நூற்றுப் பதினெட்டுப் பேர்க்கு ஆயுதம் தரிப்பித்து யுத்தத்திற்கு ஆயத்தமானான். எதற்காக? லோத்துவையும் அவன் குடும்பத்தாரையும் அவனுடைய உடைமைகளையும் மீட்டுக்கொண்டு வருவதற்காக! ஆமென். ஆபிரகாமுடைய வீட்டிலே முந்நூற்றுப் பதினெட்டு வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். அவன் வீட்டிலே பிறந்து வளர்ந்த வேலைக்காரர்கள் என்று சொல்லும்போது அவன் எவ்வளவு பெரிய சீமானாய் இருக்கிறானென்று பாருங்கள்! பெரிய ஐசுவரியவான்.

**ஆதியாகமம் 14:14**

தன் சகோதரன் சிறையாகக்கொண்டுபோகப்பட்டதை ஆபிராம் கேள்விப்பட்டபோது, அவன் தன் வீட்டிலே பிறந்த கைபடிந்தவர்களாகிய முந்நூற்றுப் பதினெட்டு ஆட்களுக்கும் ஆயுதம் தரிப்பித்து, தாண் என்னும் ஊர்மட்டும் அவர்களைத் தொடர்ந்து,

அவனுக்கு வேலை செய்வதற்கு முந்நூற்றுப் பதினெட்டுப் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு சம்பளம் கொடுக்கவேண்டும், அவனுக்கு எவ்வளவு ஆடு மாடுகள், நிலபுலன்கள் எவ்வளவு ஆஸ்தி இருந்தால் அத்தனை வேலைக்காரர்கள் இருப்பார்கள் என்று பாருங்கள். பெரிய ஐசுவரியவான். நாம் யார்? அவனுடைய பிள்ளைகள். அல்லேலூயா. நீங்களும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஆமென். உங்களுடைய தாழ்ந்த மனப்பான்மை உங்களைவிட்டுப் போகுமென்றால், உங்களுடைய அவிசுவாசம் உங்களைவிட்டுப் போகுமென்றால் நீங்களும் ஆபிரகாம் பெற்ற ஆசீர்வாதத்தைப் பெறமுடியும். அல்லேலூயா. நமக்கு வருமானம் இப்படித்தானே இருக்கிறது, நம்முடைய நிலைமை இப்படித்தானே இருக்கிறது, நம்மாலே எதுவும் செய்யமுடியாது என்ற தாழ்ந்த மனப்பான்மை உங்களுக்கு இருக்கும் வரைக்கும் இயேசுகிறிஸ்து உங்களுக்கு உதவி செய்யமுடியாது. சாத்தான் அதுவரைக்கும் கிரியை செய்துகொண்டேயிருப்பான். நான் ஆபிரகாமின் பிள்ளை! **(I am a son of**

**Abraham)**. நான் கர்த்தராலே ஆசீர்வதிக்கப்பட்டவன். அல்லேலூயா. ஆண்டவர் உங்களை உயர்த்துவார். **(The Lord will lift you up).** நாம் பெரிய ஐசுவரியவான்களாக வேண்டுமென்றல்ல நம்முடைய தேவைகளை குறைவில்லாதபடி ஆண்டவர் சந்திப்பார். **(My God shall supply all your needs).** அல்லேலூயா.

இப்பொழுது ஆபிரகாமை நீங்கள் பார்க்கும்போது அவனுடைய வீட்டிலே பிறந்து வளர்ந்த முந்நூற்றுப் பதினெட்டு வேலைக்காரர்கள் **(Trained Servants)** இருந்தார்கள். நம்முடைய கல்வாரி கூடாரத்திலும் **(Calvary Tabernacle)** செய்தியைக் கேட்டு மறுபடியும் பிறந்த ஆத்துமாக்கள் முந்நூற்றுப் பதினெட்டு பேரை ஆண்டவர் தருவாரென்று விசுவாசிக்கிறோம். அல்லேலூயா. இப்பொழுது அந்த இலக்கை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோம். ஆபிரகாமுக்கு முந்நூற்றுப் பதினெட்டு, கிதியோனுக்கு முந்நூறு, பவுலுக்கு இருநூற்றெழுபத்தாறு எல்லாமே நம்முடைய இலக்கிற்கு பொருந்தும். அல்லேலூயா. ஆபிரகாம் தன்னுடைய வேலைக்காரர்களை பயிற்சிவித்திருந்தான். அதுபோல நான் உங்களை பயிற்சிவிக்கிறேன், ஆவிக்குரிய ஜீவியத்தை பயிற்சிவிக்கிறேன், நீங்கள் எப்படி தேவனுடைய இராஜ்யத்துக்கு போகமுடியும் என்று பயிற்சிவிக்கிறேன். நம்முடைய பயிற்சி வேறே மற்ற சபைகளின் பயிற்சி வேறே. மற்ற சபைகளில் இருக்கிறவர்கள் நம்முடைய சபைக்கு வரவேண்டுமென்பது நம்முடைய விருப்பமில்லை. நம்முடைய சபையில் பிறக்க வேண்டும். அல்லேலூயா. அவர்கள் நம்முடைய வார்த்தைக்கு செவிகொடுத்து கர்த்தருக்கு பிரியமாய் ஜீவிக்கவேண்டும். அல்லேலூயா. மற்ற சபைகளில் இருக்கிறவர்களை நம்முடைய பக்கம் இழுக்கவேண்டும் என்றல்ல. அது கர்த்தருக்கு பிரியமாயிராது. ஆபிரகாம் வீட்டிலே பிறந்து வளர்ந்தவர்கள் முந்நூற்றுப் பதினெட்டுப்பேர்! அல்லேலூயா.

ஆண்டவர் ஆபிரகாமை வெளியே அழைத்து அவனுக்கு ஒரு வெளிப்பாட்டைக் கொடுக்கிறார். **(God has called out a man and given him a revelation).** எங்கேயிருந்து அவனை வெளியே அழைத்தார்? பாபிலோன் **(Babylon).** ஊர் என்கிற கல்தேயாவிலிருந்து அவனை அழைத்து ஆண்டவர் அவனைப் பயிற்சிவிக்கிறார். அவன் முந்நூற்றுப் பதினெட்டு பேருக்கு பயிற்சி கொடுக்கிறான். அல்லேலூயா. இயேசுகிறிஸ்து எனக்கு பயிற்சி கொடுக்கிறார், நான் உங்களுக்கு பயிற்சி கொடுக்கிறேன். அல்லேலூயா. அதே மாதிரி தான் **(Same Pattern).** ஆண்டவர் அவனை ஊர் என்கிற கல்தேயாவிலிருந்து கானான் தேசத்திற்கு அழைத்து அவனுக்கு வெளிப்பாட்டிற்கு மேல் வெளிப்பாட்டை **(Revelation after Revelation)** கொடுக்கிறார்.

படிப்படியாக ஆண்டவர் அவனை உயர்த்தி அவனுக்கு சரீரமாற்றத்தை **(Body Change)** கொடுத்தார். பாபிலோனிலிருந்து சரீரமாற்றத்திற்கு! **(From Babylon to Body Change).** ஆபிரகாமை பாபிலோனிலிருந்து வெளியே அழைத்து அவனுக்கு புதிய சரீரத்தைக் கொடுக்கிறார் **(Abraham was called out of Babylon to bring him into a new body)**. நூறு வயது ஆபிரகாம் இப்பொழுது இருபது வயது வாலிபனாக மாறிவிட்டான். ஆண்டவர் அவனுக்குப் புதிய சரீரத்தைக் கொடுத்து ஈசாக்கைக் கொண்டுவருகிறார். வயதானவன் இப்பொழுது இளமையாக மாறிவிட்டான். ஆண்டவர் அவனை பாபிலோனிலிருந்து வெளியே அழைத்து படிப்படியாக அவனுக்கு பயிற்சி கொடுத்து தன்னைப் படிப்படியாக அவனுக்கு வெளிப்படுத்தியதால் அவனுடைய விசுவாசம் வளர்ந்து கடைசியாக புதிய சரீரத்தைப் பெற்றுக்கொண்டான். நமக்கும் அப்படித்தான். அல்லேலூயா. ஸ்தாபனத்திலிருந்தும் பாவ ஜீவியத்திலிருந்தும் உலகத்திலிருந்தும் கர்த்தர் நம்மை வெளியே அழைத்து வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசமாகிய வார்த்தையில் **(Promised Word)** கொண்டுவந்து சத்தியத்திற்குமேல் சத்தியத்தை நமக்கு வெளிப்படுத்துகிறார். ஒவ்வொரு வாரத்திலும் இங்கே சத்தியத்தைக் கேட்டு கேட்டு நீங்கள் வெளிப்பாட்டைப் பெற்று பெற்று கடைசியாக நீங்கள் புதிய சரீரத்தைப் பெறப்போகிறீர்கள். அல்லேலூயா. அது தான் முடிவு. அல்லேலூயா. எத்தனைப் பேர் அதை எதிர்நோக்கியிருக்கிறோம்? அதற்காகத்தான் நாம் சபைக்கு வருகிறோம். அந்த வாக்குத்தத்தத்தைப் பெறுவதற்காகத்தான் வருகிறோம். அது ஆபிரகாமுடைய அனுபவமாயிருந்தது. **(That was Abraham's experience).** அதைப்போலவே ஆபிரகாமுடைய விசுவாச சந்ததியையும் ஆண்டவர் அவ்விதமாகவே பயிற்சிவிக்கிறார் **(Same way He deals with Abraham's faith seed)**. நம்மோடு சேருகிறவர்களுக்கும் நாம் அந்த பயிற்சியைத் தான் கொடுக்கவேண்டும். பெரிய புகழ்ப்பெற்றவர்களாகவும் பெரிய கட்டிடங்களைக் கட்டவேண்டுமென்றும் நாம் தான் பெரிய ஆள் என்று காண்பிக்கவேண்டும் என்பது சாத்தானின் நோக்கமாயிருக்கிறது. நமக்கு அவ்விதமான நோக்கமில்லை. நாம் ஒரு கூட்டமான ஜனங்களை கர்த்தருடைய வருகைக்காக ஆயத்தப்படுத்த வேண்டும். அல்லேலூயா.

ஆபிரகாம் அவனுடைய வீட்டிலே அவர்களுக்கு பயிற்சிக்கொடுத்தான் **(Trained men in his house).** இந்த சபையில் வார்த்தையைப் போதிக்கும்படி செய்து கர்த்தர் நமக்கு அவ்விதமான பயிற்சியைக் கொடுக்கிறார். அல்லேலூயா. அந்த முந்நூற்று பதினெட்டுப்பேரை அவன் கூட்டிக்கொண்டுபோய் நாலு ராஜாக்களோடு பலமான ராஜாக்களோடு அதிகாரமுடையவர்களோடு துரைத்தனம்பண்ணுகிறவர்களோடு **(Principalities and Powers)** பொல்லாத ஆவியின்

சேனைகளோடு அவன் போராடுகிறான். ஆமென். அதைப்போல வார்த்தையிலே நாம் பயிற்சிவிக்கப்பட்டு வார்த்தைக்கு விரோதமான காரியங்களோடு நாம் போராடுகிறோம். வார்த்தையை அசட்டைபண்ணுகிறவர்களோடு நமக்குப் போராட்டம், பாவத்திலே ஜீவிக்கிற துன்மார்க்கரோடு நமக்குப் போராட்டம், ஸ்தாபனத்து மக்களோடு போராட்டம், செய்தியிலே தவறான உபதேசத்தில் இருக்கிறவர்களோடு போராட்டம். நீங்கள் என்ன செய்யவேண்டும்? உங்களுக்கு வார்த்தயைச் சொல்லித்தருகிறேன். அந்த வார்த்தயை சத்துருவுக்கு முன்பாக போடுங்கள். பிசாசை அப்புறப்படுத்துங்கள். அவனை முறியடியுங்கள். ஆவிக்குரிய யுத்தம் செய்யுங்கள். ஆபிரகாம் அந்த முந்நூற்று பதினெட்டுப்பேருக்கு அவ்விதமாகத்தான் பயிற்சிகொடுத்திருந்தான். கர்த்தர் நமக்கு அந்த பயிற்சியைத்தான் கொடுக்கிறார். பிசாசை நாம் ஜெயிக்கவேண்டும். அல்லேலூயா. நாம் எப்படி ஆவிக்குரிய யுத்தம் செய்யவேண்டும்? **(How can we wage spiritual war?)** எவ்விதமாக நாம் ஆவிக்குரிய ஜீவியம் செய்யவேண்டும்? எப்படி சத்துருவை நாம் வீழ்த்தவேண்டும் என்ற பயிற்சியைக் கர்த்தர் நமக்குத் தருகிறார். அவன் நம்மேல் ஆதிக்கம் செலுத்தக்கூடாது. நாம் அவனை முறியடிக்கவேண்டும். பிசாசின் ஆவிகளை நாம் ஜெயிக்கவேண்டும். அல்லேலூயா. வார்த்தையில் இல்லாதவன், மறுபடியும் பிறக்காதவன் எப்படி நம்மை மேற்கொள்ளமுடியும்? ஒரு துன்மார்க்கன் எப்படி நம்மை மேற்கொள்வது? நாம் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம். அல்லேலூயா. துன்மார்க்கருக்கும் வார்த்தையை அசட்டைப்பண்ணுகிறவர்களுக்கும் இங்கே இடமில்லை. அவர்கள் பாளயத்திற்கு புறம்பே இருக்கவேண்டும். நாம் அவர்களை மேற்கொள்ளவேண்டும். அல்லேலூயா.

சோதோமின் ராஜா தோல்வியடைந்தான். ஆனால் ஆபிரகாம் ஜெயித்தான். அல்லேலூயா. இன்றைக்கு அநேகர் தோல்வியடைகிறார்கள். நாம் சோதோமின் ராஜாவைச் சேர்ந்தவர்களல்ல, நாம் ஆபிரகாமின் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஆபிரகாமின் கூட்டம் எப்பொழுதுமே ஜெயிக்கும். அல்லேலூயா. ஏனென்றால் அவர்களுக்கு வாக்குத்தத்தம் **(Promised Word)** சொல்லப்பட்டிருக்கிறது. “உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்”. **(Your seed shall possess the gates of his enemies).** அல்லேலூயா. இயேசுகிறிஸ்து என்ன சொல்லுகிறார் என்றால் பாதாளத்தின் வாசல்கள் நம்மை மேற்கொள்ளாது. **(The gates of hell shall not prevail against you)** ஆமென். எவ்வளவு வாக்குத்தத்தம் நமக்குச் சொல்லப்பட்டிருகிறது! எத்தனைப்பேர் அதை விசுவாசிக்கிறோம்? விசுவாசித்தால், அதை அறிக்கைபண்ணினால் அது உங்களுக்குச் சொந்தம். காதால் கேட்டு இருதயத்தில் விசுவாசித்து நாம் அறிக்கைபண்ணும்போது பிசாசு நமக்கு

முன்பாகத் தோல்வியடைவான். ஆமென். நீங்கள் யார் என்று அறியும்பொழுது வெளிப்பாட்டினால் அறியும்பொழுது பிசாசு பயப்படுவான். இவன் தான் யார் என்பதை அறிந்துகொண்டான், இவனை இனிமேல் ஜெயிக்கமுடியாது! அல்லேலூயா. இவன் ராஜாவின் மகன். அல்லேலூயா. ஆபிரகாமின் வித்து **(Abraham's Seed)**. இவனுக்கு வாக்குத்தத்தம் சொல்லப்பட்டிருகிறது. இவன் தன்னுடைய சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவான். கெதர்லாகோமேர் சோதோமின் ராஜாவை மேற்கொள்ளலாம் ஆனால் ஆபிரகாமை மேற்கொள்ளமுடியாது. ஆபிரகாமின் ஜனங்கள் எண்ணிக்கையில் சிறியவர்களாயிருந்தாலும் அவனால் மேற்கொள்ளமுடியாது. ஏனென்றால் கர்த்தர் அவர்களுக்கு அந்த வாக்குத்தத்தத்தைக் கொடுத்திருக்கிறார். "உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்". **(Your seed shall possess the gates of his enemies).** ஆமென்.

ஆபிரகாம் யுத்தத்திலே ஜெயம்பெற்று வரும்போது, அவன் லோத்தை மீட்டுக்கொண்டது மட்டுமல்ல, அவனுடைய உடைமைகளையும், இன்னும் எல்லாருடைய உடைமைகளையும் மீட்டுக்கொண்டு, யார் யார் அடிமைகளாய்ப் போனார்களோ அத்தனைப் பேரையும் மீட்டுக்கொண்டு வருகிறான். வரும்போது என்ன நடக்கிறது? ஆதியாகமம் **14:18** ஐ வாசிக்கலாம்.

**ஆதியாகமம் 14:18**

18. அன்றியும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து,

19. அவனை ஆசீர்வதித்து: வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிராமுக்கு உண்டாவதாக.

20. உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்.

ஆதியாகமம் **14:17** ல் சோதோமின் ராஜாவைக் குறித்து வாசிக்கிறோம். அதன்பின்பு மூன்று வசனங்கள் இடைவெளிக்குப் பின்பு மறுபடியும் சோதோமின் ராஜாவைக் குறித்து ஆதியாகமம் **14:21** ல் வாசிக்கிறோம். அதில் என்ன இரகசியம் இருக்கிறதென்று பாருங்கள்! ஆபிரகாம் யுத்தத்திலே ஜெயம்பெற்று லோத்தையும் அவனுடைய மனைவியையும், எல்லா உடைமைகளையும் மீட்டுக்கொண்டு வரும்போது, கொள்ளைப்பொருளோடு திரும்பிவரும்போது வேதத்தில் என்ன வாசிக்கிறோமென்றால், முதலாவது சோதோமின் ராஜா புறப்பட்டு சாவே என்றப்

பள்ளத்தாக்குமட்டும் ஆபிரகாமைச் சந்திக்க வருகிறான். அவன் ஆபிரகாமைச் சந்திப்பதற்குள் அங்கே ஒரு சம்பவம் நடக்கிறது.

இயேசுகிறிஸ்து யவீருவின் மகளைச் சுகமாக்கப் போகும்போது, “என்னுடைய மகள் மரண அவஸ்தைப் படுகிறாள், அவள் ஆரோக்கியம் அடையும்படி நீர் வந்து, அவள் மேல் உமது கைகளை வைக்கவேண்டும்” என்று யவீரு மிகவும் அவசரப்பட்டான். ஏனென்றால் மகள் மரிப்பதற்குள் அவர் வரவேண்டும் இல்லை என்றால் பிரயோஜனமில்லை என்று அவன் நினைத்தான். இயேசுகிறிஸ்து மெதுவாகத்தான் போய்க்கொண்டிருந்தார். ஜனக்கூட்டம் வேறு அதிகமாக இருக்கிறது. அந்த நேரத்திலே பன்னிரெண்டு வருடமாய் பெரும்பாடுள்ள அந்த ஸ்தீரி வந்து அவருடைய வஸ்திரத்தைத் தொட்டுவிட்டாள். இவர் என்ன வராமல் இன்னும் பேசிக்கொண்டிருக்கிறாரே என்று யவீரு நினைத்தான். நாம் யாரிடமாவது பேசிக்கொண்டிருக்கும்போது இன்னொருத்தர் காத்திருப்பார்கள். “என்ன போதகர் பேசிக்கொண்டேயிருக்கிறார் நாம் காத்திருக்கிறோமே நம்மை எப்போது பார்ப்பார்” என்று நினைப்பார்கள். அதைப்போலத்தான் இந்த யவீரு நினைத்தான். அவனுக்கு ஆண்டவர் சீக்கிரம் வரவேண்டும், மகள் மரிப்பதற்குள் வரவேண்டும்! இயேசுகிறிஸ்து ரொம்ப சாந்தமாக பேசிக்கொண்டிருக்கிறார். அந்த ஸ்தீரியோடு பேசுவதில் கொஞ்ச நேரமாகிவிட்டது. அதற்குள் குழந்தை மரித்தே போனது.

அதேபோலத்தான் சோதோமின் ராஜா புறப்பட்டு வருகிறதற்குள் யார் வந்தது? இதோ மெல்கிசேதேக்கு வந்துவிட்டார். அல்லேலூயா. சோதோமின் ராஜா எதற்காக வருகிறான், மெல்கிசேதேக்கு எதற்காக வருகிறாரென்று பாருங்கள். சோதோமின் ராஜா ஒரு பாவி. பாவத்திலே பிறந்து பாவத்திலே வளருகிறவன். மறுபிறப்படையாதவன். துன்மார்க்கன். ஆனால் மெல்கிசேதேக்கு! உன்னதமான தேவனுடைய ஆசாரியன். சாலேமின் ராஜா. வானத்தையும் பூமியையும் உண்டாக்கியக் கர்த்தர். அல்லேலூயா. அவர் ஆபிரகாமை ஆசீர்வதிக்க வருகிறார். சோதோமின் ராஜா ஆபிரகாமைச் சந்திக்க வரும்போது, அவன் வழியில் இருக்கும்போதே, ஆபிரகாமைச் சந்திப்பதற்கு முன்பாகவே, இதோ மெல்கிசேதேக்கு வந்து ஆபிரகாமைச் சந்தித்து அவனுக்கு அப்பமும் திராட்சரசமும் கொடுத்து அவனை ஆசீர்வதித்துவிட்டார். ஆபிரகாமும் அதற்குள் தசமபாகத்தைக்கூட செலுத்திவிட்டான். அல்லேலூயா. அவ்விதமாக அந்த மூன்று வசனங்களில் எழுதியிருக்கிறது.

**ஆதியாகமம் 14:17**

அவன் கெதர்லாகோமேரையும், அவனோடிருந்த ராஜாக்களையும் முறியடித்துத் திரும்பிவருகிறபோது, சோதோமின் ராஜா புறப்பட்டு, ராஜாவின் பள்ளத்தாக்கு என்னும் சாவே பள்ளத்தாக்குமட்டும் அவனுக்கு எதிர்கொண்டுபோனான்.

சோதோமின் ராஜா புறப்பட்டு ஆபிரகாமைச் சந்திக்க வருகிறான், அதற்குள் **18**ம் வசனத்தில் மெல்கிசேதேக்கு வருகிறார். **18, 19, 20**ம் வசனங்களில் மெல்கிசேதேக்கு ஆபிரகாமைச் சந்திப்பதையும் அவனை ஆசீர்வதிப்பதையும் பார்க்கிறோம். அதன்பின்பு **21**ம் வசனத்தில் பார்க்கும்போது சோதோமின் ராஜா அங்கே வருகிறான்.

**ஆதியாகமம் 14:21**

சோதோமின் ராஜா ஆபிராமை நோக்கி: ஜனங்களை எனக்குத் தாரும், பொருள்களை நீர் எடுத்துக்கொள்ளும் என்றான்.

பாருங்கள், அந்த இடைப்பட்ட நேரத்தில் மெல்கிசேதேக்கு ஆபிரகாமைச் சந்தித்து, அவனுக்கு இராப்போஜனம் கொடுத்து அவனை ஆசீர்வதிக்கிறார். இவன் தசமபாகத்தையும் கொடுத்துவிட்டான். அதன்பின்புதான் சோதோமின் ராஜா வருகிறான். இது நமக்கு தீர்க்கதரிசி சொல்லுகிற கருத்து **(Concept)**. ஸ்தாபனம் என்ன சொல்லுகிறதென்றால், ஆபிரகாம் அங்கே இருக்கிறான், ஒரு பக்கத்தில் சோதோமின் ராஜா நிற்பதாகவும் மறுப்பக்கத்தில் மெல்கிசேதேக்கு நிற்பதாகவும் ஒரே நேரத்தில் இரண்டு பேரும் பேசுவதாகவும் சொல்லுகிறது. அவர்கள் எழுத்தின்படிப் பார்த்துச் சொல்லுகிறார்கள். அது ஸ்தாபனக் கருத்து **(Denominational Concept)**. அது சரியான கருத்தல்ல. சோதோமின் ராஜா பக்கத்தில் மெல்கிசேதேக்கு நிற்கமாட்டார். அல்லேலூயா. மெல்கிசேதேக்கின் பிரசன்னத்தில் சோதோமின் ராஜா நிற்கமுடியாது. ஆபிரகாம் மட்டும்தான் நிற்கமுடியும். அல்லேலூயா. தேவனுடைய ராஜ்யத்தில் துன்மார்க்கர் பிரவேசிக்கமுடியாது.

ஆபிரகாம் மத்தியில் நிற்கிறான், இந்தப்பக்கத்தில் சோதோமின் ராஜா அந்தப்பக்கத்தில் சாலேமின் ராஜா, இவர் எருசலேமிலிருந்து, ஒரு பூமிக்குரிய இடத்திலிருந்து புறப்பட்டு வந்திருக்கிறார் அவனும் தன்னுடைய அரண்மனையிலிருந்து புறப்பட்டு வந்திருக்கிறான், இரண்டு பேரும் ராஜா, இரண்டு பேரும் தலைநகரத்திலிருந்து புறப்பட்டு வந்திருக்கிறார்கள், ஆபிரகாமை பள்ளத்தாக்கில் வந்து சந்திக்கிறார்கள் என்று சொல்லும்போது அது ஸ்தாபனக் கோட்பாடாயிருக்கிறது. ஆனால் தேவனுடைய வார்த்தை அப்படியல்ல. அல்லேலூயா. அவன் புறப்பட்டு வருகிறதற்குள் மெல்கிசேதேக்கு ஆபிரகாமைச்

சந்தித்து அவனை ஆசீர்வதித்துவிட்டு அவர் மறைந்துவிடுகிறார். அதன்பின்பு தான் சோதோமின் ராஜா வருகிறான். எத்தனைப் பேர் அதை விசுவாசிக்கிறோம்?

இப்பொழுது இந்த இரண்டு ராஜாக்களையும் ஒப்பிட்டுப் பார்ப்போம். சோதோமின் ராஜா ஒரு பூமிக்குரிய ராஜா **(Earthly King)**. அழிவுக்குரியவன் தற்காலிகமானவன் **(Temporal)**. மாம்சத்தின்படிப் பிறந்தவன் **(Born by sex)**. ஆனால் மெல்கிசேதேக்கு நித்திய ராஜா **(Eternal King)**. அவர் உன்னதத்திலிருந்து வந்திருக்கிறார் **(He came from heaven)**. அவர் தோன்றவும் முடியும் மறையவும் முடியும் **(He can appear and disappear)**. அவர் ஆவிக்குரிய சரீரத்தில் வந்திருக்கிறார் **(King Theophany)**. இவன் பூமிக்குரிய சரீரத்தில் வந்திருக்கிறான். இரண்டு பேருக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதென்று பாருங்கள்.

இந்த கடைசி காலத்தில் நமக்கு வெளிப்பாடு வந்திருக்கிறது **(The revelation has come to us in these last days)**. தேவன் ஆவிக்குரிய சரீரத்தில் வந்திருக்கிறார் என்று மெல்கிசேதேக்கைப் பற்றி சகோ. பிரன்ஹாம் சொல்லுகிறார் **(Melchizedek is God in Theophany)**. அவர் ஆபிரகாமுக்குத் தோன்றினார் **(He appeared to Abraham)**. ஆனால் சோதோமின் ராஜா இரதத்தில் ஏறி பிரயாணம்பண்ணி வருகிறான். அவர் திடீரென்று அவனுக்கு முன்பாகத் தோன்றினார். இப்பொழுது, அவன் இராப்போஜனம் எடுத்துவிட்டான் **(He already had communion)**. அப்பமும் திராட்சரசமும் பெற்றுக்கொண்டான். மெல்கிசேதேக்கினால் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டான் **(He was blessed already by King Melchizedek)**. அதன்பின்பு சோதோமின் ராஜா வருகிறான். சோதோமின் ராஜா எதற்காக வருகிறான்?

மெல்கிசேதேக்கு ஆபிரகாமை ஆசீர்வதிக்க வருகிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மை ஆசீர்வதிக்க வருகிறார். அல்லேலூயா. இந்த ஆலயத்தில் அவரை நாம் சந்திக்கிறோம். அவருடைய வார்த்தை நம்மைச் சந்திக்கிறது. அவருடைய வார்த்தை நமக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவருகிறது. எத்தனைப் பேர் விசுவாசிக்கிறோம்? ஆனால் சோதோமின் ராஜா சாத்தானுக்கு அடையாளமாய் இருக்கிறான். அவனும் நம்மை நோக்கி வந்துகொண்டிருக்கிறான். எதற்காக வருகிறான்? நம்மோடு பேரம் பேச வருகிறான் **(To negotiate with us)**. நீர் இதை வைத்துக்கொள்ளும் நான் அதை வைத்துக்கொள்ளுகிறேன் என்று பேரம் பேச வருகிறான். அவர் நம்மை ஆசீர்வதிக்க வருகிறார். அல்லேலூயா. சாத்தான் உங்களிடம் பேரம் பேச வருவான். "நான் உனக்கு தொலைக்காட்சிப் பெட்டியைத் **(Television)** தருகிறேன். நீ ஊரைச் சுற்றிக்கொண்டு நன்றாக அதைப் பார். நீ போய் வார்த்தையையும் கேட்டுக்கொள். உன் வீட்டில் தொலைக்காட்சியையும்

வைத்துக்கொள். நான் உன் வீட்டில் தினமும் வந்து உன்னைச் சந்திப்பேன். நீ எப்போதெல்லாம் தொலைக்காட்சியைப் பார்க்கிறாயோ அப்போதெல்லாம் நான் உன்னைச் சந்திப்பேன். நீ எனக்குச் சொந்தம்" என்று சொல்லுவான். நான் கர்த்தருக்குச் சொந்தம் என்று நீங்கள் சொல்லுவீர்கள், ஆனால் "நீ தொலைக்காட்சிப் பெட்டியை வைத்திருக்கிறாய், என் பொருள் உன்னிடம் இருக்கிறது, நீ எனக்குத்தான் சொந்தம்" என்று அவன் பேரம் பேசுவான். "இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை" என்று இயேசுகிறிஸ்து சொல்லுகிறார் **(**யோவான் **14:30)**. உலகத்தின் அதிபதி பிசாசு. அவனுடைய உடைமை என்னிடத்தில் ஒன்றுமில்லை, இருந்தால் அவன் என் வீட்டிற்கு வருவான். தொலைக்காட்சிப் பெட்டியை வைத்தால் உங்கள் வீட்டிற்கு வருவான். கணிப்பொறியில் தவறான காரியங்களைப் பார்த்தால் அவன் உங்கள் வீட்டிற்கு வருவான். அதில் எல்லாவற்றையும் செய்யலாம். பாவம் செய்வதற்கு ஏற்ற கருவியாய் அது இருக்கிறது. ஆண்டவரைத் தேடுவதற்கும் ஏற்ற கருவி அந்த கணிப்பொறி தான். எப்படி நீங்கள் பயன்படுத்துகிறீர்களோ அதைப் பொருத்து இருக்கிறது. அது ஆப்பிளாய் **(Apple)** இருக்கிறது. ஆப்பிள் என்ற ஒரு வர்த்தகச் சின்னம் **(Brand)** இருக்கிறது. அவ்வகையான கைப்பேசி மற்றும் ஐபாட் **(ipod)** போன்ற கருவிகளில் நீங்கள் பார்த்தால் அதில் ஆப்பிளைக் கடித்த மாதிரி ஒரு சின்னத்தைப் போட்டிருப்பார்கள். ஒரு கிறிஸ்தவன் தான் அதைப் போட்டிருக்கிறான். அவன் என்ன சொல்லுகிறானென்றால் அது நன்மை தீமை அறியத்தக்க விருட்சம், அதில் நல்லதும் இருக்கிறது கெட்டதும் இருக்கிறது, நீங்கள் எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். அதற்குத்தான் அவன் ஆப்பிள் படத்தைப் போட்டிருக்கிறான். உலகத்திலேயே பெரிய கணினி நிறுவனம் ஆப்பிள். அவன் ஏன் அப்படிப் போட்டிருக்கிறான்? இது ஆப்பிள் நீங்கள் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும் என்று அவனே சொல்லுகிறான். குடி குடியைக் கெடுக்கும் என்று எழுதிப் போடுகிறார்கள். அதைப்போலத்தான் "இது ஆப்பிள், ஆதாம் ஏவாள் சாப்பிட்டதால் என்ன நேர்ந்தது, நீ ஜாக்கிரதையாய் உபயோகப்படுத்து" என்று அவன் சொல்லுகிறான். அது கர்த்தருக்குத்தான் தெரியும்.

அருமையானவர்களே, அதைப் போல சோதோமின் ராஜா பேரம் பேச வருகிறான், நீ எனக்குச் சொந்தந்தான் என்று சொல்லவருகிறான். இப்பொழுது பேரம் பேசும்போது, இயேசுகிறிஸ்து என்ன சொல்லுகிறார் "இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை". அதைப்போல "உன்னுடைய பொருள் எனக்கு ஒன்றும் வேண்டாம், ஒரு சரட்டைக் கூட வேண்டாம்" என்று ஆபிரகாம் சொல்லுகிறான்.

**<u>ஆதியாகமம் 14:22</u>**

அதற்கு, ஆபிராம் சோதோமின் ராஜாவைப் பார்த்து: ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு, நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன்

சரட்டை என்றால் குதிரைக்குப் போடுகின்ற சரடு. பாதரட்சையின் வார், அது ஒரு பைசா கூட பெறாது. ஒரு சல்லி காசு கூட வேண்டாம் என்று சொல்லிவிட்டான். எத்தனைப்பேர் அப்படி சொல்லமுடியும்? நீங்கள் ஆபிரகாமின் சந்ததியாயிருந்தால் அப்படிச் சொல்லுவீர்கள். பிசாசே உன்னுடைய காரியங்கள் எனக்கு ஒன்றும் வேண்டாம். எனக்கு கர்த்தருடைய ஆசீர்வாதம் வேண்டும். அல்லேலூயா. மெல்கிசேதேக்கின் ஆசீர்வாதம் வேண்டும். அல்லேலூயா. அப்பமும் திராட்சரசமும் வேண்டும் **(Bread and Wine)**. வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான சாலேமின் ராஜாவாகிய இயேசுகிறிஸ்துவின் ஆசீர்வாதம் எனக்குத் தேவை **(Blessing of Melchizedek, the possessor of heaven and earth)**. உன்னுடைய ஆசீர்வாதம் வேண்டாம். அல்லேலூயா. எனக்கு வெளிப்பாடு வேண்டும். எனக்கு விசுவாசம் வேண்டும். எனக்கு பொறுமை வேண்டும். **(I need revelation. I need faith. I need patience)**. எனக்கு அன்பு, சந்தோஷம், ஆவிக்குரிய சந்தோஷம் போன்ற ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் வேண்டும். பிசாசே உன் பொருளை நீ வைத்துக்கொள். எனக்கு ஒன்று கூட வேண்டாம். "ஜனங்களை எனக்குத் தாரும், பொருள்களை நீர் எடுத்துக்கொள்ளும்". அப்படி இல்லை, ஒன்றும் வேண்டாம். நீ அதை வைத்துக்கொள் இதை வைத்துக்கொள், நீ அப்படி ஆகலாம் இப்படி ஆகலாம் என்று பிசாசு பேரம் பேச வருவான். லோத்தும் அவன் மனைவியும் அப்படித்தான் போனார்கள். ஆனால் ஆபிரகாம் சாராள் போல நாம் இருக்க வேண்டும். அல்லேலூயா.

லோத்து கண்களை ஏறெடுத்துப் பார்த்தான். ரொம்ப நன்றாக இருந்தது. உலகத்தை அனுபவிக்கலாம், அங்கே இங்கே உல்லாசமாய்ப் போகலாம், பிறகு எப்படி அனுபவிக்க முடியும், இதெல்லாம் இருக்கு எல்லாவற்றையும் வைத்துக்கொள் என்று சாத்தான் சொல்லுவான். எனக்கு வேண்டாம், அப்பாலே போ சாத்தானே..அல்லேலூயா.."உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக" என்று சொல்லி இயேசுகிறிஸ்து பிசாசைத் துரத்தினார். நம்முடைய மாம்சமும் மனசும் ஒருவேளை அதை விரும்பினாலும் நாம் அந்த மாம்சத்துக்கும் மனசுக்கும் இடம் கொடுக்கக்கூடாது. அல்லேலூயா. நாம் பிசாசுடன் பேரம் பேச வேண்டிய அவசியம் இல்லை. நீ உன்னுடைய உடைமைகளை

எடுத்துக்கொண்டு போ, அது எனக்குத் தேவையில்லை. எனக்குக் கர்த்தருடைய ஆசீர்வாதம் தேவை. மெல்கிசேதேக்கின் ஆசீர்வாதம் தேவை. அல்லேலூயா.

வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் மெல்கிசெதேக்காக வந்திருக்கிறார். **(He became Melchizedek)**. மெல்கிசேதேக்கு என்றால் தேவன் ஆவிக்குரிய சரீரத்தில் வந்திருக்கிறார் என்பதே. **(God in Theophany)**. அந்த ஆவிக்குரிய சரீரத்தில் தான் **(Theophany Body)** உலகத்தையே உண்டாக்கினார். அதைத்தான் உங்களுக்கு "கிறிஸ்துவுடன் நடப்பது" **(Walking With Christ)** என்ற செய்தியில் சொல்லியிருக்கிறேன். நித்திய ஆவியாயிருந்த **(El-O-Him)** தேவன் ஒரு காணக்கூடிய சரீரத்தில் தோன்றினார். அதுதான் கிறிஸ்து **(Christ)**. ஆதியிலே கிறிஸ்து இருந்தார். ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தையாய் **(Logos or Word)** இருந்துதான் உலகத்தை உண்டாக்கினார். அவர்தான் இப்போது மெல்கிசேதேக்காக வந்திருக்கிறார். ஆவிக்குரிய சரீரத்தில் வந்திருக்கிறார். அந்த மெல்கிசேதேக்குதான் மாம்சத்தில் வந்த போது இயேசுகிறிஸ்து. அந்த வார்த்தை மாம்சமாகி நம் மத்தியிலே வாசம்பண்ணினது.

இப்பொழுது ஆபிரகாம் யாரைப் பார்க்கிறான்? வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரைப் பார்க்கிறான். அவர் எப்படித் தோன்றினார்? அவன் பார்த்துக்கொண்டிருக்கும்போது ஒரு வெளிச்சம் தோன்றினது **(Suddenly there appeared a Light)**. அந்த வெளிச்சத்திலிருந்து ஒரு மனிதன் வருகிறார். அவர் அப்பமும் திராட்சரசமும் கொண்டுவருகிறார். இதோ ஆபிரகாமுக்கு அதைக் கொடுக்கிறார். ஆபிரகாமை ஆசீர்வதிக்கிறார். அல்லேலூயா. வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் ஆவிக்குரிய சரீரத்தில் வந்திருக்கிறார். எத்தனைப்பேர் விசுவாசிக்கிறோம்? சோதோமின் ராஜா இரதத்தில் ஏறி மெதுவாக வந்துகொண்டிருக்கும்போது இவர் திடீரென்றுத் தோன்றி அப்பமும் திராட்சரசமும் கொடுத்து ஆபிரகாமை ஆசீர்வதித்து மறைந்துவிட்டார் **(He disappeared)**.

சகோ. பிரன்ஹாம் குகையில் மூன்று நாள் ஜெபம்பண்ணிக் கொண்டிருக்கிறார். மூன்றாம் நாள் அதிகாலை மூன்று மணிக்கு திடீரென்று அந்த குகையிலே வெளிச்சம் பிரகாசித்தது. ஒரு மனிதன் வெளிச்சத்திலிருந்து தோன்றினார் **(A Man stepped out of the Light)**. பலமுள்ள தூதன் சகோ. பிரன்ஹாமுடன் பேசினார். அவர் வாழ்க்கையின் குழப்பத்தை நீக்கி, மூன்று இழுப்புகளின் **(Three Pulls)** இரகசியத்தைச் சொல்லிவிட்டு பின்பு அந்த வெளிச்சத்திற்குள் சென்று அப்படியே மறைந்துவிட்டார். சகோ. பிரன்ஹாமுக்கு எப்படி வந்ததோ அதே மாதிரிதான் ஆபிரகாமுக்கு வந்திருக்கவேண்டும். அல்லேலூயா.

கர்த்தர் வெளிச்சமாயிருக்கிறார். அக்கினி ஸ்தம்பமாக **(Pillar of Fire)** இருக்கிறார். அக்கினி ஸ்தம்பத்திலிருந்து ஒரு மனிதன் தோன்றி இராப்போஜனம் **(Communion)** கொடுத்து ஆசீர்வதித்துவிட்டுப் போய்விட்டார். அல்லேலூயா. அதன்பின்பு தான் சோதோமின் ராஜா வந்து நீ அதை வைத்துக்கொள் இதைத் தந்துவிடு என்று பேரம் பேசுகிறான். ஆபிரகாம் எந்த பேரமும் பேசவில்லை. "உன் பொருள் எனக்குத் தேவையில்லை" என்று கூறிவிட்டான். "நான் தான் எல்லாவற்றையும் மீட்டுக்கொண்டு வந்தேன். ஆனாலும் உன்னுடைய பொருள் எனக்குத் தேவையில்லை. நான் கொள்ளையாடின பொருள் எனக்குச் சொந்தம். உன்னுடைய உடைமைகள், உன் மக்களுடைய உடைமைகளை நீயே வைத்துக்கொள்" என்று சொன்னான்.

**எபிரெயர் 5:11-14**

11. இந்த மெல்கிசேதேக்கைப்பற்றி நாம் விஸ்தாரமாய்ப் பேசலாம்; நீங்கள் கேள்வியில் மந்தமுள்ளவர்களானபடியால், அதை விளங்கப்பண்ணுகிறது அரிதாயிருக்கும்.

12. காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள்.

13. பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான்.

14. பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்.

பரிசுத்த பவுல் அந்த எபிரெயர்க்குச் சொல்லும்போது, உங்களுக்கு மெல்கிசேதேக்கைப்பற்றி போதித்தால் உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. நீங்கள் குழந்தையாய் இருக்கிறீர்கள். காலத்தைப் பார்த்தால் போதகராயிருக்கவேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வார்த்தையின் மூல உபதேசங்களை மறுபடியும் போதிக்கவேண்டியதாயிருக்கிறது. பாலுண்கிறவன் குழந்தையாயிருகிறபடியால் நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும் என்று அந்த வார்த்தையிலே எழுதப்பட்டிருக்கிறது. பரிசுத்த பவுல் அந்த எபிரெய சபையைப் பார்த்து நீங்கள் குழந்தையாயிருக்கிறீர்களென்று சொல்லுகிறான். ஆனால் ஏழாம் அதிகாரத்தில் மெல்கிசேதேக்கைப் பற்றி பேசுகிறான். இப்பொழுது அவர்களுக்கு அந்த புரிந்துகொள்ளுதல் **(Understanding)** வந்துவிட்டது. அந்த மெல்கிசேதேக்கைக் குறித்து பவுல் நமக்கு ஒரு புரிந்துகொள்ளுதலை கொண்டுவருகிறார். என்ன புரிந்துகொள்ளுதல்? மெல்கிசேதேக்கு என்றால் சாலேமின் ராஜா, எருசலேமின் ராஜா.

அல்லேலூயா. என்ன எருசலேம்? பூமிக்குரிய எருசலேம் அல்ல பரம எருசலேம் **(Heavenly Jerusalem)**. புதிய எருசலேம் **(New Jerusalem)**. ஆமென். அந்த பட்டணத்தின் **(Eternal City)** ராஜா. இந்த எருசலேம் அதற்கு அடையாளமாயிருக்கிறது. மெல்கிசேதேக்கு என்றால் நீதியின் ராஜா **(King of Righteousness)**. சாலேமின் ராஜா என்றால் சமாதானத்தின் ராஜா **(King of Peace)**. இயேசுகிறிஸ்து நீதியின் ராஜாவும் சமாதானத்தின் ராஜாவுமாயிருக்கிறார். அல்லேலூயா.

**எபிரெயர் 7:3**

**இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்; இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்.**

சோதோமின் ராஜாவுக்கு தாயும் தகப்பனும் இருக்கிறார்கள். அவன் மாம்சத்தின்படி பிறந்தவன். ஆனால் மெல்கிசேதேக்குக்கு தகப்பனும் தாயும் கிடையாது. வம்சவரலாறும் கிடையாது. அவர் நித்திய ராஜா **(Eternal King)**. அல்லேலூயா. சோதோமின் ராஜா நித்தியமானவன் கிடையாது. அவன் கொஞ்ச காலத்தில் மரித்துப்போயிருப்பான். இந்த மெல்கிசேதேக்கு பரம எருசலேமிலிருந்து வந்திருக்கிறார். பூமிக்குரிய எருசலேமிலிருந்து வரவில்லை. நீங்கள் கவனித்துப் பார்த்தீர்களென்றால் இந்த ராஜாவுக்கு துவக்கமும் கிடையாது முடிவும் கிடையாது. **(He has no beginning and no ending)**. தகப்பனும் தாயும் இல்லாதவர். வம்சவரலாறும் இல்லாதவர். அனாதி தேவன், சதாகாலமும் ஜீவிக்கிற தேவன். அல்லேலூயா. அப்படியானால், அவர் இப்பொழுது நம் மத்தியில் இருக்கவேண்டும். எத்தனைப் பேர் விசுவாசிக்கிறோம்? இப்பொழுது உங்கள் மத்தியில் இருக்கிறார். சோதோமின் ராஜா எத்தனையோ ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பாகவே மரித்துப்போனான். ஆபிரகாம் மரிப்பதற்கு முன்னே அவன் மரித்திருப்பான். ஆனால் இயேசுகிறிஸ்து? அவர் மெல்கிசேதேக்கு, நித்தியமானவர் என்றால் இப்பொழுதும் நம் மத்தியில் அவர் ஜீவிக்க வேண்டும் **(He is alive even now)**. அல்லேலூயா.

**எபிரெயர் 7:4**

**இவன் எவ்வளவு பெரியவனாயிருக்கிறான் பாருங்கள்; கோத்திரத்தலைவனாகிய ஆபிரகாம் முதலாய் கொள்ளையிடப்பட்ட பொருள்களில் இவனுக்குத் தசமபாகம் கொடுத்தான்.**

இப்பொழுது ஆபிரகாம் என்ன செய்கிறான்? அந்த மெல்கிசேதேக்குக்கு எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான் என்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம். வேதத்தில் முதல் முறையாக தசமபாகத்தைக் குறித்து இங்கேதான் எழுதியிருக்கிறது

**(This is the first time we read about paying tithe in the Bible)**. முதல் யுத்தமும் அதுதான். முதல் இராப்போஜனமும் அதுதான். இவை எல்லாமே முதல் முறையாக இந்த 14ம் அதிகாரத்தில் நிறைவேறுகிறது. அவன் தசமபாகம் கொடுக்கும்போது என்ன நினைக்கிறான் என்றால், "வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் நமக்கு முன்னால் நிற்கிறார், இவருக்குத் தான் எல்லாமே சொந்தம், **(It belongs to Him; He is the Creator; He is the possessor of the Heaven and the Earth)** என்னுடைய வருமானமெல்லாம் இவருக்குச் சொந்தம். இதோ அவர் எனக்கு அதைக் கொடுத்திருக்கிறார். இது அவரிடமிருந்து வந்ததை நான் ஒப்புக்கொள்வதற்கு அடையாளமாக அதில் பத்தில் ஒரு பங்கை அவருக்குத் திருப்பிச் செலுத்துவேன்" **(We give back to Him a portion in acknowledgement)**. இந்த வருமானம் கர்த்தரிடத்திலிருந்து வந்ததென்று நீங்கள் விசுவாசிப்பீர்களென்றால் தசமபாகத்தைக் கொடுப்பீர்கள்.

சத்துருக்களை அவன் கையில் அவர்தான் ஒப்புக்கொடுத்திருக்கிறார். எல்லாமே அவரிடமிருந்து வந்தது. அவன் அதை அங்கீகாரம் பண்ணவேண்டும் என்பதற்காக அதில் ஒரு பாகத்தை அவருக்குக் கொடுக்கிறான். **(We recognize it comes from Him)**. ஆபிரகாம் அவர் சிருஷ்டிகர் என்று அறிந்திருந்தான். என் பெலத்தினால் நான் சம்பாதித்தேன் என்றல்ல, இது கர்த்தரிடத்திலிருந்து வந்தது. கர்த்தர் எனக்கு சுகத்தைத் தந்தார், பெலத்தைத் தந்தார், இந்த வருமானத்தைச் சம்பாதிக்க உதவி செய்தார், அதை அங்கீகாரம் பண்ணும்படியாக பத்தில் ஒரு பாகத்தைக் கர்த்தருக்குச் செலுத்துகிறேன். இதுதான் தசமபாகத்தைக் குறித்த சரியான வெளிப்பாடு. சரியான புரிந்துகொள்ளுதல்.

வெளிச்சத்திலிருந்து தோன்றினார். ஆபிரகாமுக்கு அப்பமும் திராட்சரசமும் கொடுத்தார். வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமானவருடைய ஆசீர்வாதம் ஆபிரகாமுக்கு உண்டாவதாக, உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று ஆசீர்வதித்தார். ஆபிரகாம் ஆசீர்வாதத்தை வாங்கின உடனே தசமபாகத்தைச் செலுத்தினான். உண்மையாய் நடந்த சம்பவம். எத்தனைப் பேர் விசுவாசிக்கிறோம்? இப்போது ஆபிரகாமின் பிள்ளைகளாகிய நாமும் அதைத்தான் செய்கிறோம். அல்லேலூயா. நாம் இராப்போஜனத்தில் பங்கு பெறுகிறோம்; தசமபாகத்தைச் செலுத்துகிறோம். எல்லாம் கர்த்தரிடத்திலிருந்து வந்ததென்று நாம் புரிந்துகொள்ளுகிறோம். எல்லாம் அவருக்குச் சொந்தமானது **(All things come from God. He is the possessor of the Heaven and the Earth)**. நான் அதை விசுவாசிக்கிறேன். ஆகையால் ராஜாவாகிய

மெல்கிசேதேக்குக்குத் தசமபாகத்தைக் கொடுக்கிறேன் **(Pay back the tithe to the King Melchizedek)**. அல்லேலூயா.

இப்போது ஆபிரகாமுக்கு என்ன வயது? 85 வயது. 75 வயதில் அவன் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்கு வந்திருகிறான். 15ம் அதிகாரம் வரும்போது 10 வருடம் கடந்துவிட்டது. இப்போது "எனக்கு இன்னும் குழந்தையைத் தரவில்லையே?" என்று ஆண்டவரிடம் கேட்கிறான். ஆண்டவர் சொல்லுகிறார் " நீ வா, வெளியே வா, வானத்தின் நட்சத்திரங்களைப் பார். நீ அதைப்போல் ஆவாய். நீ தூளாயிருக்கிறாய் **(You are dust)**. நீ நட்சத்திரமாக மாறுவாய் **(You will become a star)**". நாம் எத்தனைப் பேர் தூளாயிருக்கிறோம்? நாம் மண்னென்று உணருகிறோம். பெருமை பாராட்ட ஒன்றுமில்லை. ஆனால் கர்த்தரைக் குறித்து நாம் மேன்மை பாராட்டுகிறோம். அல்லேலூயா. அவர் என்னை நட்சத்திரமாக மாற்றியிருக்கிறார். நான் மண் தான், ஆனால் அவர் என்னை நட்சத்திரமாக மாற்றியிருக்கிறார். அவர் என்னை மாற்றவில்லையென்றால் நான் மண்ணாகத்தான் இருப்பேன். உலகத்தின் மக்கள் மண்ணாயிருக்கிறார்கள். மாயையிலும் லேசானவர்களாக இருக்கிறார்கள். ஆனால் நாம் நித்தியமானவர்கள் **(Eternal)**. அல்லேலூயா. எத்தனைப் பேர் விசுவாசிக்கிறோம்? ஏனென்றால் நித்தியமானவர் **(Eternal Person)** நம்மை மாற்றியிருக்கிறார்.

ஆதாம் தேவனுடைய சிந்தையிலிருந்தான் **(Adam was in the thoughts of God)**. அதன்பின்பு ஆவிக்குரிய சரீரத்தில் அவனைக் கொண்டுவந்தார். அதைத்தான் ஆதியாகமம் 1:26,27ல் வாசிக்கிறோம். அவன் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்டான். அதன்பின்பு ஆதியாகமம் 2:7ல் மாம்சத்தில் வந்தான். இயேசுகிறிஸ்து தேவனுடைய சிந்தையிலிருந்தார். உலகத்திலே மனுஷனாய் வெளிப்படவேண்டுமென்ற சிந்தையிருந்தது. பின்பு அவர் வார்த்தையாய் **(Logos)** இருந்தார். மெல்கிசேதேக்காக வந்தார். அதன்பின்பு அவர் மாம்சத்திலே வந்தார். ஆனால் நீங்களும் நானும் பிறந்தது வேறு. நாம் தேவனுடைய சிந்தையில் இருந்தோம். நாம் வார்த்தையாய் இராமல் நேரடியாக மாம்சத்தில் வந்திருக்கிறோம் **(We bypassed the Word and came in flesh)**. ஆனால் ஆதாம் அவ்விதமாக வரவில்லை. இயேசுகிறிஸ்து அவ்விதமாக வரவில்லை. ஆபிரகாம் நம்மைப்போலத்தான் வந்தான். அவன் தேவனுடைய சிந்தையிலிருந்தான். இப்போது தூளாயிருக்கிறான் **(dust)**. பூமியின் மண்ணினால் உருவாக்கப்பட்டவனாயிருக்கிறான். நாம் வார்த்தையை **bypass** பண்ணி வந்திருக்கிறோம். ஆவிக்குரிய சரீரத்தில்

**(Theophany)** வாழாமல் மாம்சத்தில் வந்திருக்கிறோம். இயேசுகிறிஸ்து அப்படி வரவில்லை. மெல்கிசேதேக்காய் இருந்து அவர் மாம்சத்திலே வந்தார். நாம் எப்படி அந்த ஆவிக்குரிய சரீரத்ததிற்குப் போகிறது? அதற்கு நாம் மெல்கிசேதேக்கை சந்திக்க வேண்டும். அப்பமும் திராட்சரசமும் பெறவேண்டும். அவருடைய ஆசீர்வாதத்தைப் பெறவேண்டும். பின்பு நாம் நம்முடைய ஆவிக்குரிய சரீரத்திற்குப் போவோம் **(Then we go back to our theophany)**. நம்மை ஆவிக்குரிய சரீரத்திற்குக் கொண்டுசெல்லத்தான் இயேசுகிறிஸ்து மாம்சமும் இரத்தமும் உடையவராய் வந்தார். அந்த வெளிப்பாட்டைக் கொடுப்பதற்காகத்தான் அவர் அப்பமும் திராட்சரசமும் கொண்டுவருகிறார். அல்லேலூயா. எத்தனைப் பேர் விசுவாசிக்கிறோம்?

நாம் எல்லோரும் தேவனுடைய ராஜ்யத்திற்கு வெளியே பிறந்தோம். ஆதாம் தேவனுடைய ராஜ்யத்திற்கு உள்ளே பிறந்தான். ஏதேனில் ஆண்டவர் அவனைக் கொண்டுவந்தார். ஆனால் நீங்களும் நானும் மாம்சத்தின்படி தேவனுடைய ராஜ்யத்திற்கு வெளியே பிறந்தோம். இப்போது எப்படி ஏதேனுக்குள்ளே போகிறது? நாம் தேவனுடைய ராஜ்யத்திற்குள் எப்படிப்போவது? இயேசுகிறிஸ்து என்ன சொன்னார்? "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்". அல்லேலூயா. **(We need Word and Spirit)**. நமக்கு வார்த்தையும் ஆவியும் வரும்போது, ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கும்போது நாம் தேவனுடைய ராஜ்யத்திற்குள் வருகிறோம். அல்லேலூயா. ஏவாள் நம்மைப் பாவப்பிறப்புக்குள் கொண்டுவந்தாள். நாம் தேவனுடைய ராஜ்யத்திற்கு வெளியே இருந்தோம். நாம் தேவனுடைய சாயலை இழந்திருந்தோம். பாவமனுஷனுடைய சாயலை உடையவர்களாயிருந்தோம். நாம் எப்படி தேவசாயலைப் பெற்று ஏதேனுக்குள் போகமுடியும் என்பதைத்தான் அங்கே சொல்லியிருக்கிறது.

இப்போது மெல்கிசேதேக்கைச் சந்திக்கும்போது ஆபிரகாம் பாவமனுஷ சாயலாயிருக்கிறான். அவன் இன்னும் விருத்தசேதனம் பெறவில்லை. அவனுக்கு இன்னும் புதிய நாமம் **(New Name)** கொடுக்கப்படவில்லை. அவன் இன்னும் பரிசுத்தமாக்கப்படவில்லை. இவ்விதமான ஒரு சூழ்நிலை இருக்கும்போதுதான் மெல்கிசேதேக்கைச் சந்திக்கிறான். அப்பொழுதுதான் அவர் அவன் நட்சத்திரமாக **(Star)** மாறமுடியும் என்று சொல்கிறார். அல்லேலூயா.

இங்கேதான் முதலாவது வேதத்தில் அப்பத்தையும் திராட்சரசத்தையும் பற்றி வாசிக்கிறோம் **(First time in the Bible we read about bread and wine)**. அல்லேலூயா. இன்றைக்கு இராப்போஜனம் வேண்டாம், நாங்கள் ஆண்டவரைச்

சந்திக்கப்போகிறோம் என்று சொல்லுகிறார்கள். அவர்களின் ஆவிக்குரிய ஜீவியத்தைப் பார்த்தீர்களானால் இக்கபோத்தாய் இருக்கும். அவர்கள் ஆண்டவரைச் சந்திக்கப்போகிறார்களாம்! மெல்கிசேதேக்கைச் சந்தித்து இராப்போஜனம் பெறவில்லையென்றால் ஒருக்காலும் அவரைச் சந்திக்கமுடியாது. அப்படிப்பட்டவர்களை நியாயத்தீர்ப்பு நாளிலே நாம் நியாயந்தீர்ப்போம். அவர்களை மறுபடியும் புதுப்பிப்பது கூடாதகாரியம். அப்படி கள்ள உபதேசத்தில் போகிறவர்களோடு நாம் ஐக்கியம் வைக்கக்கூடாது. அவர்கள் மறுபடியும் வருவார்களென்று நாம் நினைக்கக்கூடாது. அவர்கள் நித்திய காலமாக இழக்கப்பட்டார்கள் **(They are eternally lost)**. அவர்கள் தவறான உபதேசத்தில் போகும்போது ஒருக்காலும் அவர்களைப் புதுப்பிக்கமுடியாது. அவர்கள் தேவனுடைய ராஜ்யத்திற்கு அப்பாற்பட்டவர்கள். மணவாட்டி ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்தில் பங்குபெறும் வரைக்கும் இராப்போஜனத்தில் பங்குபெறவேண்டும் என்று சொல்லும்போது, சாத்தான் எவ்விதமான உபதேசத்தைக் கொண்டுவந்து ஆத்துமாவை வீழ்ச்சியடைய வைக்கிறான் பாருங்கள்? அதனால் வஞ்சிக்கப்பட்டவர்களை மறுபடியும் புதுப்பிக்கலாம் என்று நீங்கள் யாரும் நினைக்கக்கூடாது.

யார் இந்த மெல்கிசேதேக்கு? **(65-0221E Who Is This Melchizedek?)** என்ற செய்தியைச் சகோ. பிரன்ஹாம் நமக்கு அருமையாய் கொடுத்திருக்கிறார். அந்த மெல்கிசேதேக்குதான் இந்த கடைசி காலத்தில் வந்திருக்கிறார். அல்லேலூயா. அதனால் நாம் பாரம்பரியமாக **(traditional)** இராப்போஜனத்தில் பங்குபெறாதபடி வெளிப்பாடுடன் பங்குபெறவேண்டும். அல்லேலூயா. ஏழு முத்திரைகள் திறக்கப்பட்டு நமக்கு வார்த்தை வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நாம் வார்த்தையை **bypass** பண்ணி மாம்சத்தில் வந்திருக்கிறோம். இந்த இராப்போஜனத்தில் பங்குபெறும்போது, மெல்கிசேதேக்குடன் ஐக்கியப்படும்போது, அவருடைய வார்த்தையிலும் ஆவியிலும் **(Word and Spirit)** நாம் பங்குபெறும்போது நாம் நட்சத்திரமாக **(star)** மாறுவோம். அல்லேலூயா. அதில் நாம் பங்குபெறாத பட்சத்தில் மாறமுடியாது. அந்த இரகசியம்தான் **(mystery)** அங்கே இருக்கிறது. கர்த்தருடைய பந்தியைப் புறக்கணிக்கிறவர்கள் எடுத்துக்கொள்ளப்படுதலில் **(Rapture)** பங்குபெறமுடியாது. என்னுடைய கணவர் ரொம்ப பரிசுத்தவான் என்று நினைத்துக்கொண்டிருக்கலாம். ஆனால் இராப்போஜனத்தில் பங்குபெறுகிறாரா? பங்குபெறாத பட்சத்தில் அவர் நித்திய ராஜ்யத்தில் பங்குபெறமுடியாது. அதனால் நாம் வீணான நினைவுகளை விட்டுவிட்டு வேதத்தின்படி விசுவாசிக்க வேண்டும். சொந்த கருத்துக்களை விட்டுவிட்டு கர்த்தருடைய வார்த்தை என்ன சொல்லுகிறது **(What the Word of God says?)** என்று பார்க்கவேண்டும். ஏன் அந்த 14ம் அதிகாரத்தை மத்தியில் வைத்திருக்கிறார்? அங்கே

தூள் **(dust)** இங்கே நட்சத்திரம் **(star)**, மத்தியில் இராப்போஜனம் **(communion)**. அல்லேலூயா.

ஆபிரகாம் ஒரு தீர்க்கதரிசியாக இருக்கிறான். மெல்கிசேதேக்கு இயேசுகிறிஸ்துவாக இருக்கிறார். அந்த சந்திப்பு அங்கே வருகிறது. அல்லேலூயா. எப்பொழுது அந்த சந்திப்பு வருகிறது? தன் சகோதரனாகிய லோத்துவையும் அவன் உடைமைகளையும் மீட்டுக்கொண்டு வரும்போது, யுத்தத்தில் ஜெயத்தைப் பெற்று வரும் வழியிலே, சரியான நேரத்திலே **(It's the time of visitation)** கர்த்தர் ஆபிரகாமைச் சந்திக்கிறார். அப்பமும் திராட்சரசமும் கொடுக்கிறார். அந்த அப்பமும் திராட்சரசமும் **(Bread and Wine)** எதற்கு அடையாளமாய் இருக்கிறது? ஒரு நாளிலே நான் மாம்சத்தில் வருவேன் **(I will incarnate in flesh)**. நான் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவராய் வந்து என்னை நானே பலியாக ஒப்புக்கொடுப்பேன். சிலுவையில் நான் செய்யப்போகிற அந்த கிரியை மீட்பைக் கொண்டுவரும். தூளாக **(dust)** இருக்கிற நீ நட்சத்திரமாக **(star)** மாறுவாய். எத்தனைப் பேர் விசுவாசிக்கிறோம்?

இயேசுகிறிஸ்து மிக உன்னதத்தில் இருக்கிறார். அவர் ஏழாம் பரிமாணத்தில் **(7$^{th}$ Dimension)** இருக்கிறார். மிக உயரத்தில் இருக்கிற ஆண்டவர் மிகத் தாழ்வாக வந்தார். நமக்காக ஒரு மனுஷனாக வந்தார். அல்லேலூயா. மாட்டுத்தொழுவத்திலே பிறந்து சாதாரண மனுஷர்களோடு பழகினார். மீன் பிடிக்கிறவர்களோடும், ஆயக்காரர்களோடும், பாவிகளோடும் தாழ்மையான மக்களோடும் வாசம்பண்ணி, நம்முடைய பாவத்தைச் சுமந்துகொண்டு பாதாளம் வரைக்கும் போனார். நம்மை மீட்பதற்காக ஏழாம் பரிமாணத்திலிருந்து, அவ்வளவு உயரத்திலிருந்து பொல்லாத ஆவிகள் இருக்கும் அடி பாதாளம் வரைக்கும் போய் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களைப் பிடுங்கிக்கொண்டு "மரணமே உன் கூர் எங்கே, பாதாளமே உன் ஜெயம் எங்கே" என்று சொல்லி மரணத்தையும் பாதாளத்தையும் ஜெயித்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். அல்லேலூயா. இயேசுகிறிஸ்து என்ன செய்தாரோ அதைத்தான் ஆபிரகாம் செய்கிறான். ஆபிரகாம் தன் சகோதரனை மீட்பதற்காக தெற்கேயிருந்த மம்ரே என்ற சமபூமியிலிருந்து வடக்கிலுள்ள தாண் வரைக்கும், தமஸ்கு வரைக்கும் விரோதிகளைத் துரத்தி இங்கே இருந்து அங்கே வரை சென்று சத்துருக்களை ஜெயித்து தன் சகோதரனை மீட்டுக்கொண்டு வந்தான். ஆபிரகாமுடைய வாழ்க்கை இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கைக்கு அடையாளமாயிருக்கிறது. அந்த இரகசியத்தை அவன் வாழ்ந்து

காண்பித்தான் **(Abraham living out the mystery of Christ)**. அல்லேலூயா. எத்தனைப்பேர் நாம் இயேசுகிறிஸ்துவை வெளிப்படுத்திக் காண்பிக்கிறோம்?

ஏதேனில் ஆதாமும் ஏவாளும் தேவனோடு ஐக்கியமாயிருந்தார்கள் **(Adam and Eve were in fellowship with God)**. ஆனால் சர்ப்பமானது ஏவாளை வஞ்சித்ததினிமித்தமாக அந்த ஐக்கியம் முறிக்கப்பட்டது **(Broken fellowship)**. அவர்கள் ஏதேனைவிட்டுத் துரத்தப்பட்டார்கள். அவ்விதமாய் இருக்கும்போது கர்த்தர் அவர்களுக்காக ஒரு ஆட்டுக்குட்டியை பலிசெலுத்தி அவர்களை மீட்டுக்கொண்டார் என்று அறிந்திருக்கிறோம். அதைப்போலவே கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மை மீட்கும்படியாக தேவாட்டுக்குட்டியாக வந்து பாதாளம் வரைக்கும் பிசாசை ஜெயித்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்.

**கொலோசெயர் 2:15**

துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்.

ஆபிரகாம் என்ன செய்தான்? ராஜாக்களை முறியடித்தான், **(He slaughtered the kings and spoiled principalities and power)** அவர்களுடைய ஆதிக்கத்திலிருந்த அந்த மக்களை விடுவித்தான். அல்லேலூயா. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிசாசின் பிடியிலிருந்து நம்மை விடுவித்தார். எத்தனைப்பேர் விசுவாசிக்கிறோம்? ஆபிரகாம் இயேசு வாழ்ந்த வாழ்க்கையை வாழ்ந்தான்.

இப்போது, மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் **(Bread and Wine)** கொண்டுவருகிறார். நாம் இராப்போஜனத்தில் பங்குபெறுகிறோம். “அந்த அப்பமானது உங்களுக்காக பிட்கப்பட்ட என் சரீரமாயிருக்கிறது, அந்த திராட்சரசம் உங்களுக்காக சிந்தப்பட்ட என்னுடைய இரத்தமாயிருக்கிறது” என்று சொல்லுகிறார். அப்பமும் திராட்சரசமும் யாருக்கு? ஜெயங்கொள்ளுகிறவர்களுக்குத்தான் **(Bread and Wine are only for the overcomers)**. இன்னும் பாவத்தில் அடிமைப்பட்டிருக்கிறவர்களுக்கல்ல. இன்னும் என்னிடம் தீய பழக்கம் இருக்கிறது என்று சொல்லுகிறவர்களுக்கல்ல. ஆபிரகாம் ஜெயத்துடன் வருகிறான். ஜெயங்கொண்டவர்களுக்குத்தான் இராப்போஜனம். அல்லேலூயா. அப்பமும் திராட்சரசமும் பலியின் மூலப்பொருட்களாய் இருக்கிறது **(Bread and Wine are the elements of sacrifice)**. இயேசுவின் சரீரம் நமக்காக ஒரேதரம் பலியிடப்பட்டது. அவருடைய இரத்தம் நமக்காக சிந்தப்பட்டது. சாத்தான் நம்மைத் திருடிக்கொண்டு போய்விட்டான். நம்முடைய சுகத்தைக் கொண்டு போய்விட்டான். நம்முடைய ஆத்துமாவைக் கொள்ளைக்கொண்டு போனான். நம்முடைய சந்தோஷம், நம்முடைய உடைமைகள்

எல்லாவற்றையும் கொள்ளைக்கொண்டு போனான். இயேசுகிறிஸ்து நம்மை மீட்டுக்கொண்டார். சாத்தான் ஒரு கொள்ளைக்காரனாய் இருக்கிறான் **(Satan is a robber)**. இயேசுகிறிஸ்து அவனுடைய ஆதிக்கத்திலிருந்து அவனுடைய பிடியிலிருந்து நம்மை விடுவிக்கும்படியாகத்தான் கல்வாரியிலே பலியானார். சாத்தானை ஜெயித்தார். எத்தனைப்பேர் அதை விசுவாசிக்கிறோம்?

இப்போது சரியான நேரத்திலே **(Right Time)** ஆபிரகாமைச் சந்திக்கிறார். சோதோமின் ராஜா அவனைச் சந்திப்பதற்கு முன்னதாக, அவன் யுத்தத்திலே வெற்றிபெற்று வரும்போது இன்னும் வீட்டிற்கு போவதற்கு முன்னதாக அவர் ஆவிக்குரிய சரீரத்தில் வந்து அவனைச் சந்திக்கிறார். அல்லேலூயா.

ஆபிரகாம் பார்க்கிறான், நான் முதுமை அடைந்துக்கொண்டே போகிறேன், ஆனால் அவர் என்றைக்குமே முதுமை அடைவதில்லை! நான் ஒரு நாளில் மரித்துப்போவேன், அவர் ஒரு நாளும் மரிப்பதில்லை. அவரைப்போல நானும் மாறவேண்டும். அல்லேலூயா. அதுதான் இந்த இரகசியம். நீங்கள் ஒருபோதும் முதுமையாக முடியாது, ஒருபோதும் மரிக்கமுடியாது! அந்த இடத்திற்கு நீங்கள் போகவேண்டும். அந்த சரீரத்தைப் பெறவேண்டும். அதற்கு என்ன இரகசியம்? அப்பமும் திராட்சரசமும் **(Bread and Wine)**. அல்லேலூயா. "நான் பலியாக மாறவேண்டும். நான் மாம்சத்திலே வந்து ஆபிரகாமின் சந்ததியாகிய உன்னை தூளிலிருந்து நட்சத்திரத்துக்கு கொண்டு போகவேண்டுமென்றால் நான் இதைச் செய்யவேண்டும். அதனால்தான் சரியான நேரத்திலே வந்திருக்கிறேன். நீ ஜெயங்கொள்ளுகிறவன், நீ அப்பத்திலும் திராட்சரசத்திலும் பங்குபெறலாம்" **(You are an overcomer, you can take the communion)** என்று இயேசுகிறிஸ்து சொல்லுகிறார். அல்லேலூயா. உலகம், மாமிசம், பிசாசை நாம் ஜெயித்திருக்கிறோம். எல்லாவற்றையும் இயேசுகிறிஸ்து நம்முடைய பாதபடியாக்கிப் போட்டுவிட்டார். அல்லேலூயா. எல்லாவிதத்திலும் நாம் சோதிக்கப்பட்டும் அவைகளை ஜெயிக்கிறவர்களாக இருக்கிறோம். ஆமென்.

இங்கே கவனிக்கும்போது, மெல்கிசேதேக்கு திராட்சரசத்தைக் கொடுத்து ஆபிரகாமை ஆசீர்வதிப்பதைக் காண்கிறோம். எவ்விதமான சூழ்நிலையில் அது நடக்கிறது? அது, எப்படி நாம் பூமியின் தூளிலிருந்து நட்சத்திரத்துக்கு உயர்த்தப்படுவோம் என்பதைக் காண்பிக்கிறதாயிருக்கிறது. அது ஒரு இரகசியம். அல்லேலூயா.

இயேசுகிறிஸ்து சொல்லுகிறார் “ஆபிரகாம் என்னைக் காண விரும்பினான். கண்டு களிகூர்ந்தான்”. “உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லையே, நீ ஆபிரகாமைக் கண்டாயோ” என்று அவரைப் பார்த்துக் கேட்டார்கள். அதற்கு இயேசு “ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்” என்றார்.

**யோவான் 8:56-58**

56. உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான் என்றார்.

57. அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லையே, நீ ஆபிரகாமைக் கண்டாயோ என்றார்கள்.

58. அதற்கு இயேசு: ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

**1400** வருடங்களுக்கு முன்னே ஆபிரகாம் வாழ்ந்தார், எப்படி நீ ஆபிரகமைக் கண்டாய் என்று சொல்லும்போது, “ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்” என்றார். அல்லேலூயா. யார் ஆபிரகாமைச் சந்தித்தது? மெல்கிசேதேக்கு. இப்பொழுது அவர் மாம்சத்தில் வந்திருக்கிறார். அந்த இரகசியம் அவர்களுக்குத் தெரியாது. இந்த கடைசிகாலத்தில் ஆண்டவர் நமக்கு அதை வெளிப்படுத்தியிருக்கிறார். அல்லேலூயா. பவுலுக்கு வெளிப்படுத்தினார். பவுலுக்குப் பின் சகோ. பிரன்ஹாமுக்கு வெளிப்படுத்தினார். ஸ்தாபனத்து மக்களுக்கு அதை வெளிப்படுத்தவில்லை.

அப்பம் எப்படி ஏற்படுகிறது? கோதுமை மாவாக்கப்படவேண்டும். இயேசுகிறிஸ்து நமக்காக நொறுக்கப்பட்டார். அல்லேலூயா. அக்கினியில் வைக்கவேண்டும். அதேபோல திராட்சக்குலையானது செடியிலிருந்து அறுக்கப்படவேண்டும். அது பிழியப்படவேண்டும். இயேசுகிறிஸ்து கல்வாரியிலே நமக்காக பலியானார். எத்தனைப் பேர் விசுவாசிக்கிறோம்?

ஆண்டவர் ஆபிரகாமுக்குத் தரிசனம் கொடுக்கிறார். என்னவென்றால், நான் அப்பமும் திராட்சரசமுமாய் மாறப்போகிறேன். நான் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவராய் வந்து இராப்போஜனத்தை ஏற்படுத்தும்போது உன் சந்ததியார் அதில் பங்குபெறும்போது தூளிலிருந்து நட்சத்திரமாக மாறுவார்கள். அல்லேலூயா. பின்னும் அவனுக்கு வெளிப்பாட்டைக் கொடுக்கிறார் **(Further Revelation)**. அந்த பதினைந்தாம் அதிகாரத்தில், ஆபிரகாம் கேட்கிறான் “நான் அதை எப்படி அறிவேன்? நீர் எப்படி என்னை தூளிலிருந்து நட்சத்திரத்துக்கு கொண்டுசெல்வீர்”. “நீ ஒரு பலியைக் கொண்டுவா, மூன்று வயது ஆட்டுக்கடாவைக் கொண்டுவா, மூன்று வயது வெள்ளாட்டைக் கொண்டுவா, மூன்று வயது கிடாரியைக் கொண்டுவா, ஒரு காட்டுப்புறாவையும் ஒரு புறாக்குஞ்சையும் என்னிடத்தில் கொண்டுவா” என்று கர்த்தர் சொல்லுகிறார். அவன் பலிசெலுத்துகிறான். அந்த துண்டங்களின் நடுவே அக்கினிஜுவாலைத் தோன்றினது. அப்போது ஆண்டவர் ஆபிரகாமோடு

உடன்படிக்கைப்பண்ணி “உன் சந்ததியை நான் இவ்விதமாக ஆசீர்வதிப்பேன், இதோ இந்த இடத்தையெல்லாம் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் கொடுத்தேன்” என்றார். அல்லேலூயா.

இன்னும் அவனுக்கு இரகசியத்தை வெளிப்படுத்துகிறார் **(Mystery Unfolded)**. ஆபிரகாம் கிறிஸ்துவின் இரகசியத்தை வாழ்ந்து காண்பித்தான். “நீ உனக்கு ஒரேபேறான குமாரனை எனக்காக பலிசெலுத்து”. ஆபிரகாம் அதை வாழ்ந்து காண்பிக்கிறான். “நீ உன் ஒரேபேறான குமாரனை எப்படி பலியாக ஒப்புக்கொடுக்கிறாயோ அதேபோல் நான் பலியாகி அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவேன். அல்லேலூயா.

ஆபிரகாமுக்கு வெளிப்பாட்டின் மேல் வெளிப்பாட்டைக் கொடுக்கிறார் **(Revelation after Revelation)**. என்ன வெளிப்பாடு? கிறிஸ்துவின் வெளிப்பாடு **(The Mystery of Christ)**. அல்லேலூயா. இன்றைக்கு ஆண்டவர் நமக்கு அந்த வெளிப்பாட்டைத் தந்துகொண்டிருக்கிறார். அல்லேலூயா. ஏனென்றால் நாம் தூளிலிருந்து ஆவிக்குரிய சரீரத்திற்கு **(Theophany)** போகவேண்டும், மகிமையடையவேண்டும் **(Glorification)**. எத்தனைப் பேர் விசுவாசிக்கிறோம்?

நீங்கள் கவனியுங்கள். முதலில் சர்ப்பத்தின் வித்து வருகிறது. சர்ப்பத்தின் வித்து வந்ததினால்தான், பிசாசு ஏவாளை வஞ்சித்ததினிமித்தமாகத்தான் நம்முடைய மாம்ச பிறப்பு வந்தது. தாய் தகப்பனுக்கு நாம் பிறக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. நாம் எப்படி பிறந்திருக்கவேண்டும்? உரைக்கப்பட்ட வார்த்தையினால் பிறந்திருக்கவேண்டும் **(We are supposed to be born by the Spoken Word of God)**. ஆனால் நாம் மாம்சத்தின்படி பிறந்திருக்கிறோம். இனச்சேர்க்கையின் **(Sex Birth)** மூலமான மாம்ச பிறப்பை சாத்தான் கொண்டுவந்தான். சர்ப்பத்தின் வித்து **(Serpent Seed)** அங்கே வந்தது. சர்ப்பத்தின் வித்து வரவில்லையென்றால் ஸ்திரீயின் வித்து வராது. இயேசுகிறிஸ்து மாம்சத்தில் தோன்றவேண்டிய அவசியம் இருக்காது. சர்ப்பத்தின் வித்து கன்னிப்பிறப்பிற்கு வழிவகுத்தது **(Serpent Seed gave way to Virgin Birth)**. ஆண்டவர் கன்னியின் மூலமாகப் பிறந்தார். கன்னிப்பிறப்பு எதற்கு வழிநடத்துகிறதென்றால் புது சிருஷ்டிக்கு வழிநடத்துகிறது **(Virgin Birth gave way to New Creation)**. நாம் பார்க்கிற எல்லாமே பழைய சிருஷ்டிப்பு **(Old Creation)**. இன்றைக்கு பார்க்கிற வானம் பூமி எல்லாம் பழைய சிருஷ்டிப்பு. நம்முடைய சரீரம் பழைய சிருஷ்டிப்பு. ஆனால் நீங்கள் மறுபடியும் பிறக்கும்போது நீங்கள் புது சிருஷ்டியாக **(New Creation)** இருக்கிறீர்கள். அல்லேலூயா. ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. அல்லேலூயா. புது சிருஷ்டிப்பு என்ன

செய்கிறதென்றால் புதுப்பிறப்பை நமக்குக் கொண்டுவருகிறது **(New Creation gives us New Birth)**. படிப்படியாகப் பாருங்கள். ஒரு நாளில் நான் பழைய சிருஷ்டியாக இருந்தேன். இப்பொழுது நான் புதுச்சிருஷ்டியாக இருக்கிறேன். தேவன் புதிய இருதயத்தையும் புதிய ஆவியையும் கொடுத்திருக்கிறார் **(God created a new heart and new spirit)**. அல்லேலூயா. எத்தனைப்பேர் அப்படி இருக்கிறோம்?

புது சிருஷ்டி, அதன்பின்பு புதுப்பிறப்பு, அதுதான் பரிசுத்தஆவியின் அபிஷேகம் **(Baptism of the Holy Ghost)**. தேவன் என்னில் வாசமாயிருக்கிறார். நான் தேவனின் ஆலயமாயிருக்கிறேன் **(I am a temple of God)**. அல்லேலூயா. எத்தனைப்பேர் சொல்லமுடியும்? நாம் எடுத்துக்கொள்ளப்படுதலில் **(Rapture)** பங்குபெற வேண்டுமென்றால் இதையெல்லாம் நாம் பெறவேண்டும். நாம் பழைய வாழ்க்கை வாழக்கூடாது. நான் தேவனுடைய ஆலயமாயிருக்கிறேன். இந்த ஆலயத்திற்குள் இயேசுகிறிஸ்து இருந்து வழிநடத்துகிறார். இந்த சபையை வெளிப்பாட்டிற்குமேல் வெளிப்பாடு, ஆவியின்மேல் ஆவியைத் தந்து வழிநடத்திக்கொண்டிருக்கிறார். நான் தேவனுடைய ஆலயமாயிருக்கிறேன், தேவனுடைய ஆவியால் வழிநடத்தப்படுகிறேன் **(I am a temple of God, I am led by the Spirit of God)**. நான் மறுபிறப்பை அடைந்திருக்கிறேன். அல்லேலூயா. மறுபிறப்பு தான் பரிசுத்தஆவியின் அபிஷேகம். மறுபிறப்பு நம்முடைய ஆவிக்குரிய சரீரத்துடன் **(Theophany)** நமக்கு ஒரு இணைப்பை **(link)** ஏற்படுத்துகிறது. ஆவிக்குரிய சரீரம் ஒரு நாளில் நம்மை மகிமையடந்த நிலைக்கு **(Glorified condition)** கொண்டுசெல்லும். நீங்கள் எந்த படிக்கு வந்திருக்கிறீர்கள் என்று பாருங்கள்.

சர்ப்பத்தின் வித்து கன்னிப்பிறப்பிற்கு வழிநடத்துகிறது. இயேசு மாம்சத்தில் தோன்றினார். நமக்காக பலியானார். அவருடைய ஆவியினாலே ஆண்டவர் புது சிருஷ்டிப்பைக் கொண்டு வருகிறார். ஒரு புதிய சந்ததியைக் **(New Race)** கொண்டு வந்திருக்கிறார். நாம் கிறிஸ்துவின் சந்ததியாயிருக்கிறோம். அதன்பின்பு பரிசுத்தஆவியின் அபிஷேகம். நாம் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறோம். தேவனுடைய ஆவி எனக்குள் வாசமாயிருக்கிறது. அது என்னை ஆவிக்குரிய சரீரத்திற்கு இணைக்கிறது **(link)**. ஒரு நாளில் ஆவிக்குரிய சரீரம் என் சரீரத்தோடு ஒன்றுசேரும்போது **(merge)** நான் மகிமையடைவேன் **(Glorified)**. அல்லேலூயா. நட்சத்திரமாக **(Star)** மாறுவேன். அல்லேலூயா. எத்தனைப்பேர் விசுவாசிக்கிறோம்? நான் ஒரு நட்சத்திரம் **(I am a star)**. அல்லேலூயா.

நாம் நம்முடைய ஆவிக்குரிய சரீரத்தில் வாழாமல் **(bypass)** மாம்சத்திலே இங்கே வந்திருக்கிறோம். நாம் அந்த சரீரத்திற்கு எப்படி போவது? அதற்குத்தான்

நமக்கு மெல்கிசேதேக்கைப் பற்றிய வெளிப்பாடு கொடுக்கப்பட்டிருக்கிறது. அல்லேலூயா. யார் இந்த மெல்கிசேதேக்கு **(Who is This Melchizedek?)**. முத்திரைகள் திறக்கப்பட்டதினால் தீர்க்கதரிசி செய்தி மூலமாக நமக்கு அது வெளிப்பட்டிருக்கிறது. எல்லாவற்றையும் குறித்த புரிந்துகொள்ளுதல் **(understanding)** நமக்கு வந்திருக்கிறது. ஸ்தாபனத்தில் உலக பிரசித்திப்பெற்ற போதகராக இருக்கலாம், பெரிய பிரசங்கியாராய் இருக்கலாம், ஆனால் அவர்களுக்கு இந்த வெளிப்பாடு இல்லை. அவர்கள் பிலேயாமைப் போல் கைக்கூலிக்குத் தீர்க்கதரிசனம் உரைக்கிறவர்கள். ஆனால் நமக்கு தேவனுடைய சிந்தை வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நம்முடைய பேர் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறதை இப்போது நாம் காண்கிறோம். எத்தனைப்பேர் காண்கிறோம்? ஆமென். இப்போது நாம் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுகிறோம். தேவனுடைய சிந்தை நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அல்லேலூயா. அவருடைய மனதிலே என்ன சிந்தைகளை வைத்திருந்தாரோ அந்த சிந்தைகளை நமக்கு வெளிப்படுத்திவிட்டார். அதுமாத்திரமல்ல நமக்கு பிரதிநிதித்துவம் இருக்கிறது **(We have the representation)**. என்ன பிரதிநிதித்துவம் இருக்கிறது? நமக்கு ஒரு ஆவிக்குரிய சரீரம் **(theophany)** அங்கே இருக்கிறது. அதுதான் அந்த பிரதிநிதித்துவம். இந்த மாம்ச சரீரம் எதிர்மறையாகவும் **(negative)** அந்த ஆவிக்குரிய சரீரம் உண்மையானதாகவும் **(positive)** இருக்கிறது. அல்லேலூயா.

ஆனால் ஒருவன் கெட்டவார்த்தைப் பேசுகிறவனும், குடிக்கிறவனும் தேவனுடைய வார்த்தையை அசட்டைப்பண்ணுகிறவனும், பொறாமையுள்ளவனும், கோள் சொல்லுகிறவனும், ஒருவர்க்கொருவர் சண்டையை ஏற்படுத்துகிறவனும், தீய சுபாவம் உள்ளவனுமாயிருந்தால் அப்படிப்பட்டவனுக்கு கீழே இருக்கிற உலகத்தில் தான் பிரதிநிதித்துவம் இருக்கிறது. நமக்கு மேலோகத்தில் இருக்கிறது. எத்தனைப்பேர் விசுவாசிக்கிறோம்? தேவனுடைய வார்த்தையின்மேல் வாஞ்சையாயிருப்பதைப் பொறுத்து அது உங்களை நிருபித்துக் காண்பிக்கிறது. எனக்கு தேவனுடைய வார்த்தைமேல் தீராத தாகம் இருக்கிறது, நான் கர்த்தருக்குப் பிரியமாய் ஜீவிக்கவேண்டுமென்று விரும்புகிறேன், நான் ஆவிக்குரியவனாய் இருக்கவேண்டுமென்று விரும்புகிறேன், எனக்கும் ஆண்டவருக்கும் ஒரு தொடர்பு **(relationship)** இருக்கவேண்டுமென்று விரும்புகிறேன், நான் எல்லாவற்றையும் ஜெயிக்கவேண்டுமென்று விரும்புகிறேன் என்ற வாஞ்சை உங்களுக்கு இருந்தால் உங்களுக்கு ஆவிக்குரிய சரீரம் பரலோகத்தில் இருக்கிறது **(You have a representation in heaven)**.

"நான் உலகத்தில் வாழ்ந்து உலகத்தின் ஆசாபாசங்களை அனுபவிக்கவேண்டும், இப்போது உலகத்தில் இருக்கும்போதுதானே அதைச் செய்யமுடியும், உலகத்தைவிட்டு போனபின்பு, அல்லது வயதானபின்பு அதைச் செய்யமுடியுமா, இப்போதே நான் எல்லாவற்றையும் அனுபவிக்கவேண்டும்" என்று சொன்னால் உங்களுக்கு பிரதிநிதித்துவம் கீழே இருக்கிறது. பாதாளத்தில் இருக்கிறது. அங்கேதான் போகவேண்டியதாய் வரும்.

**II கொரிந்தியர் 3:18**

18. நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.

இப்பொழுது, நம்முடைய வாழ்க்கையை நாம் பார்க்கும்போது, கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம். அல்லேலூயா. இந்த வேத புத்தகம்தான் நம்முடைய கண்ணாடி. இந்த கண்ணாடியில் நாம் பார்க்கும்போது எவ்வளவு அழகாக இருக்கிறது! மெல்கிசேதேக்கைப் பற்றிய வெளிப்பாடு என்ன அருமையாயிருக்கிறது! அது ஆபிரகாமுக்கு எப்படி நடந்ததோ அப்படியே எனக்கும் நடக்கிறது. அல்லேலூயா. கர்த்தர் எனக்கும் அதையே தான் செய்கிறார். நான் ஆபிரகாமுடைய வித்தாயிருக்கிறேன். ஆபிரகாமுடைய விசுவாச சந்ததியாயிருக்கிறேன் **(I am a faith seed of Abraham)**. மாம்ச சரீரத்தில் இருந்து, தூளில் இருந்து நட்சத்திரமாக மாறுகிறோம். மகிமையடைகிறோம் **(Glorified)**. மெல்கிசேதேக்கு எப்படி இருந்தாரோ அதைப்போலவே என்னையும் ஆண்டவர் மாற்றுகிறார். அவருக்கு துவக்கமும் இல்லை முடிவும் இல்லை. எனக்கும் அப்படித்தான். அவர் பரலோகத்தில் இருந்து வந்திருக்கிறார், அங்கே போகிறார். நானும் அப்படித்தான். அங்கே இருந்து வந்திருக்கிறேன் அங்கே போகிறேன். அவருக்கு மரணம் கிடையாது, முதுமை கிடையாது. அதேபோல எனக்கும்! எத்தனைப்பேர் விசுவாசிக்கிறோம்? எனக்கு அந்த பிரதிநிதித்துவம் இருக்கிறது. எத்தனைப்பேர் சொல்லமுடியும்? அல்லேலூயா.

இப்போது நான் ஒன்றைக் கூறி முடிக்கப்போகிறேன். நீங்கள் அறிவதற்காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சகோ. பிரன்ஹாமின் மனைவியாகிய ஹோப் **(Hope)** மரித்துப்போனார்கள். அவருடைய மகள் ஷாரோன் ரோஸ் **(Sharon Rose)** மரித்துப்போனாள். வால்நட் ரிட்ஜ் **(Walnut Ridge)** என்ற இடத்தில்தான் அவர்கள் கல்லறை இருக்கிறது. இப்போதுகூட அந்த கல்லறை இருக்கிறது. சகோ. பிரன்ஹாம்

தன் மனைவியை அங்கே அடக்கம்பண்ணுகிறார். அடுத்த நாள் குழந்தை மரித்தபோது அந்த கல்லறையைத் திறந்து குழந்தையைத் தாயின் மார்பிலே கொடுத்தார்போல் அடக்கம்பண்ணினார்கள். சகோ. பிரன்ஹாம் கண்ணீரோடு திரும்புகிறார். அவர் நேசித்த மனைவி நேசித்த மகள். இரண்டுபேரையும் மிகவும் அதிகமாக நேசித்தார், அவர்கள் மரித்துப்போனார்கள். அடக்கம்பண்ணும்போது மண்ணுக்கு மண்ணாகவும் சாம்பலுக்கு சாம்பலாகவும் புழுதிக்குப் புழுதியாகவும் ஒப்புக்கொடுக்கிறேன் என்று சொல்லும்போது அவர் அதைப் பார்க்கிறார். அவருடைய மனைவிக்கு பழுப்பு நிற கண்கள், பழுப்பு நிற கூந்தல் **(Brown eyes and brown hair)**. ஷாரோன் ரோஸ் ஒன்றரை வயது குழந்தை. அந்த குழந்தையை மிகவும் நேசித்தார். அதுவும் மரித்துப்போனது. சகோ. பிரன்ஹாம் ஒரு தரிசனம் காண்கிறார்.

காலம் என்ற திரைக்கு அப்பால் போகும்போது அவருடைய மனைவியைப் பார்க்கிறார். அவர்களுக்கு பழுப்பு நிற கண்களும் பழுப்பு நிற கூந்தலும் இருக்கிறது. அவருடைய மகளைப் பார்க்கும்போது இளம்பெண்ணாக **(Young Girl)** இருக்கிறாள். ஒன்றரை வயது குழந்தை பதினெட்டு வயது இளம்பெண்ணாக இருக்கிறாள். என்ன இது ஆச்சரியம். அல்லேலூயா. காலம் என்னும் திரைக்கு அப்பால் அங்கே அவர்கள் ஜீவிக்கிறார்கள். இங்கே பழுப்பு நிற கண்கள் அங்கேயும் பழுப்பு நிற கண்கள். இங்கே பழுப்பு நிற கூந்தல் அங்கேயும் பழுப்பு நிற கூந்தல். இங்கே குழந்தை அங்கே இளம்பெண். அவர் அங்கே பார்க்கிறார். இன்றைக்கும் அவர்கள் அங்கேதான் இருக்கிறார்கள். எத்தனைப்பேர் விசுவாசிக்கிறோம்? சகோ. பிரன்ஹாமும் இப்போது அங்கேதான் இருக்கிறார். எத்தனைப்பேர் விசுவாசிக்கிறோம்? நீங்கள் விசுவாசிக்கிறது உண்மை என்று எத்தனைப்பேர் நம்புகிறோம்? ஆமென். அங்கே அவர்கள் இருக்கிறார்கள். அதே சமயம் இங்கே பார்த்தீர்களானால் அந்த சரீரம் இன்னும் அந்த குழியில் தான் இருக்கிறது. சகோ. ஹோப்பின் சரீரமும், ஷாரோன் ரோஸின் சரீரமும் சகோ. பிரன்ஹாமின் சரீரமும்கூட மண்ணுக்குள்தான் இருக்கிறது. தூளாக **(dust)** இருக்கிறது. இந்த சரீரம் மண்ணினால் உண்டானது அது மண்ணுக்குத் திரும்புகிறது. நம்முடைய தாய் தகப்பனிடதிலிருந்து இந்த சரீரத்தைப் பெற்றிருக்கிறோம். இது மண்ணினால் உருவாக்கப்பட்டது, மண்ணுக்குத் திரும்புகிறது. சகோ. ஹோப்பின் சரீரமும் இங்கேதான் இருக்கிறது. ஆனால் அவர்கள் இன்னொரு இடத்தில் ஜீவித்துக்கொண்டிருக்கிறார்கள். அல்லேலூயா. அந்த சரீரம் என்றைக்காவது மரிக்குமா? மரிக்காது. அது முதுமை அடையுமா? அடையாது. அங்கே கல்லறை இருக்கிறதா? இல்லை. எத்னைப்பேர் விசுவாசிக்கிறோம்? பரிபூரணமான இடம் **(Perfect Place)**. அல்லேலூயா. நீங்கள் பரிபூரணம் அடைந்தால் அந்த பரிபூரண இடத்திற்குப் போகலாம் **(Perfection leads to Perfect Place)**. அங்கே

நாம் களைப்படைவதில்லை. அவர்கள் எல்லாரும் இளமையாக இருக்கிறார்கள். எல்லாரும் அழகாக இருக்கிறார்கள். எத்தனைப்பேர் விசுவாசிக்கிறோம்?

அங்கே ஒரு சரீரம். இங்கே ஒரு சரீரம். இந்த சரீரத்தை அடக்கம்பண்ணியாகிவிட்டது. அங்கே ஆத்துமா ஜீவிக்கிறது. இரண்டுமே இருக்கத்தான் செய்கிறது. இது மண்ணுக்கு மண்ணாய் போயிருக்கிறது. அது ஜீவித்துக்கொண்டிருக்கிறது. எது முதலில் வந்தது? இந்த சரீரமா? அந்த சரீரமா? அங்கே இருக்கிற அந்த சரீரந்தான் முதலில் வந்தது. எத்தனைப்பேர் விசுவாசிக்கிறோம்? இது இரண்டாவது வந்தது. அதுதான் முதலாவது உண்டானது. சகோ. பிரன்ஹாம் காலம் என்னும் திரைக்கு அப்பால் உங்களையும் என்னையும் பார்த்திருக்கிறார். அல்லேலூயா. உலகத்தோற்றத்திற்கு முன்னதாகவே தேவன் நம்மைப் பார்த்திருக்கிறார். "பூமியை அஸ்திபாரப்படுத்தும்போது நீ எங்கே இருந்தாய்? யோபே நீ சொல்". இதோ நாம் அங்கே இருந்தோம். அதுதான் முதலாவது. இது அதின் எதிர்மறையாக **(negative)** இருக்கிறது. அது உண்மையானதாயிருக்கிறது **(positive)**. இரண்டும் சந்திக்கும்போது மகிமையடைகிறது **(Glorification)**. அல்லேலூயா.

இந்த இரகசியம் எப்படி என்றால், அவர் கன்னியின் மூலமாக பிறக்கவேண்டும், அப்பமும் திராட்சரசமுமாய் மாறவேண்டும், நாம் அதைப் புசிக்கவேண்டும், அது நம்மோடுகூட ஒன்றாய் மாறவேண்டும், நாம் அவருடைய ஆலயமாக மாறவேண்டும், பரிபூரணம் அடையவேண்டும். அப்போது அந்த பரிபூரண இடத்திற்கு நாம் போவோம். எத்தனைப்பேர் விசுவாசிக்கிறோம்? கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக. நாம் ஜெபிப்போம்.

நாம் வீணான கட்டுக்கதைகளை பின்பற்றவில்லை, மனுஷனுடைய உபதேசங்களைப் பின்பற்றவில்லை. நாம் தேவனுடைய வார்த்தையைப் பின்பற்றுகிறோம். தேவனால் கொடுக்கப்பட்ட வெளிப்பாட்டைப் பின்பற்றுகிறோம். ஆகாயத்தில் நாம் சிலம்பம்பண்ணவில்லை. நாம் எங்கேயிருந்து வந்தோம் எங்கே போகிறோம் என்று அறிந்திருக்கிறோம். நிச்சயமில்லாமல் நாம் ஓடவில்லை. நிச்சயத்தோடு ஓடிக்கொண்டிருக்கிறோம். நாம் விசுவாசிப்பவர் இன்னார் என்று அறிந்திருக்கிறோம். கர்த்தர் யார் என்று தெரியாதபடி இன்று உலகத்தில் ஆராதனை செய்கிறார்கள். அவர் இன்னார் என்றும் அவர் வார்த்தை என்னதென்றும் நாம் அறிந்திருக்கிறோம். கண்ணாடியிலே நம்முடைய சாயலை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆபிரகாமுடைய விசுவாச சந்ததியாயிருக்கிறோம். ஆபிரகாம் இயேசுகிறிஸ்து வாழ்ந்த வாழ்க்கையை வாழ்ந்தான் **(Abraham was living**

**out the mystery of Christ)**. அதேபோல ஆண்டவர் நமக்கும் கிருபை தந்திருக்கிறார். எல்லோரும் கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்...ஆண்டவரே எனக்கு அந்த கிருபையைத் தாரும். அவ்விதமாய் நான் வாழத்தக்கதாக அவ்விதமான ஆசீர்வாதத்தை எனக்குத் தாரும் என்று சொல்லி நாமெல்லாரும் கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்...

இயேசுவே உம்மைத் துதிக்கிறோம்...நீர் நல்லவராய் இருக்கிறீர்...நீர் பெரியவராய் இருக்கிறீர்...நீர் வல்லமையுள்ள தேவனாயிருக்கிறீர்..உம்முடைய அன்பு மேலான அன்பு. ஆபிரகாமை நேசித்தீர். அவனை பாபிலோனை விட்டு வெளியே அழைத்தீர். அவனுக்கு வெளிப்பாட்டின் மேல் வெளிப்பாட்டைத் தந்தீர். உம்மைக் குறித்த வெளிப்பாட்டை அவன் அறிந்துகொள்ளும்போது கடைசியாக அவனுக்கு சரீர மாற்றத்தைத் **(Body Change)** தந்தீர். புதிய சரீரத்தை **(New Body)** அவனுக்குக் கொடுத்தீர். அவனைத் தூளில் இருந்து நட்சத்திரமாக மாற்றினீர் **(From dust to Star)**. அவன் இபோது உன்னதத்தில் இருக்கிறான். உம்மோடுகூட இருக்கிறான். அவனுக்கு உயிர்த்தெழுதல் நடந்துவிட்டது. இயேசுகிறஸ்து மாம்சத்திலே வந்து நீர் எங்களுக்காக எல்லாவற்றையும் செய்து முடித்தீர். கல்வாரியிலே அவ்வளவு பெரிய காரியத்தை நீர் வெளிப்படுத்தினீர். அந்த மகிமையை நாங்கள் அறிவோமென்றால் எங்களுடைய வாழ்க்கை எல்லாம் மாறிப்போகும். நாங்கள் தூளில் இருந்து நட்சத்திரமாக மாறுவோம். ஆண்டவரே அந்த வெளிப்பாட்டைத் தருவீராக. அந்த வெளிப்பாட்டைப் பெறாதபடி சாத்தான் ஜனங்களுடைய உள்ளத்தை இருக்கிவைத்திருக்கிறான். அவன் அதின்மேல் ஆதிக்கம் வைத்திருக்கிறான். இயேசுவின் நாமத்திலே அந்தக் கட்டுகளை உடைக்கிறோம். கர்த்தாவே அந்த விதமான கட்டுகள் எல்லாவற்றையும் எடுத்துப்போட்டு நீர் வெளிப்படுத்துவீராக. ஆண்டவரே தூளில் இருந்து புது சிருஷ்டியாக மாறத்தக்கதாக, புது பிறப்பை அடைய, ஆவிக்குரிய சரீரத்தோடு ஒரு இணைப்பு ஏற்பட, அந்த மகிமையடைந்த நிலைக்கு எங்களை வழிநடத்துவீராக. ஆவிக்குரியவர்களாக மாற்றுவீராக. உன்னதத்திலே உம்மோடுகூட உட்காரும்படியான சிலாக்கியத்தைத் தருவீராக. நீர் அதற்காகத்தான் உலகத்திலே வந்தீர். அதற்காகத்தான் மரணத்தையும் பாதாளத்தையும் ஜெயித்தீர். உமக்காக அல்ல எங்களுக்காக நீர் எல்லாவற்றையும் செய்து முடித்தீர். அதற்காக உமக்குச் ஸ்தோத்திரம். நீர் பெரியவர், நல்லவர், வல்லவர் என்று நாங்கள் உம்மைப் போற்றுகிறோம். எல்லா துதிக்கும் ஸ்தோத்திரத்துக்கும் நீர் பாத்திரராயிருக்கிறீர். இங்கே இருக்கிற எல்லோரையும் மாற்றுவீராக. ஒவ்வொருத்தரையும் தூளிலிருந்து நட்சத்திரத்துக்கு உயர்த்துவீராக. கர்த்தர் ஒரு நாளில் நீர் மகிமையடைந்ததைப் போல நாங்களும் மகிமையடைவோம் என்ற நம்பிக்கையோடு இருக்கிறோம்.

அனைவரையும் ஆசீர்வதியும் ஆண்டவரே, வழிநடத்தும். கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.